செந்தமிழ்ச் செல்வி

8

சிலம்பு - ௩ 3 பரல் - ௮

ஆவணி - செப்டம்பர் - 1925

JL.
O31m2ll,N22
N25.3.8
166170

Reg. No. M. 3725

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௩ } துரோதன ஆவணி { பால் ௮

உள்ளுரை

இறையனாரகப்பொருள்	௩௨௧
கோயில்	௩௩௪
அகம்புறம்	௩௩௭
ஏடுதேடல்	௩௪௩
திருப்பாசுரம்	௩௪௫
ஒரு குறளுண்மை விளக்கம்	௩௫௫
புறநானூறும் தமிழர் மாண்பும்	௩௫௮
பழந்தமிழ்	௩௬௧
நாமகள் அருச்சனை அகவல்	௩௬௫
தமிழின் பெருமை	௩௭௦
குமரகுருபர சுவாமிகள்	௩௭௧
தென்னிந்திய தமிழ்ச்சங்கம்	௩௭௨
குறிப்பு	௩௭௩
மதிப்புரை	௩௭௪




The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 3. தனிப்படிக்

(All Rights Reserved)

‘செந்தமிழ்ச் செல்வி’ இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

(Editorial Board Members)

தலைவர் :

1. திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.
அட்வகேட், நியாயகலாசாலைப் போராசிரியர், சென்னை.

2 ,, ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B.A., L.T.
பாடசாலை டெப்டி இன்ஸ்பெக்டர், சைதாப்பேட்டை பிரிவு.

3. ,, ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், ஹீபர் கலாசாலை, திருச்சிராப்பள்ளி.

4. ,, துடிசைக்கிழார் அ. சிதம்பரனாரவர்கள்,
போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், ஹாரூர், சேலம்.

5 ,, M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B.A.
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

6 ,, வித்வான் மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
மகிபாலன்பட்டி.

7. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B.A.,
வக்கீல், சாத்தூர்.

8. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

கையொப்ப விபரம்

	ரூ.	அ.
இந்தியா, இலங்கை, பர்மா		
முதலிய உள்நாடுகளுக்கு ஆண்டுக் கையொப்பம்	3	0
கழகப் பங்காளிகளுக்கும், மாணவர்களுக்கும் ,,	2	8
வெளிநாடுகளுக்கு ,,	3	8

மாதிரிப் பிரதி விலை 4 அணா

குறிப்பு:—பினாங், சிங்கப்பூர் தவிர பிற வெளிநாடுகளி லுள்ளவர்கள் முன்பண மனுப்பியே பத்திரிகையினைப் பெற்றுக் கொள்ளல்வேண்டும்.

பத்திரிகை வேண்டுவோரும், விளம்பரங்கொடுக்க விரும்புவோரும் அடியிற்காணும் விலாசத்திற்கு எழுதுக.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
சென்னை & திருநெல்வேலி

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௩ } [illegible] ஆண்டு [illegible] திங்கள் { பரல் ௪
1925 [illegible]

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இறையனார் அகப்பொருள்

[கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L.]

([illegible])

[illegible] தலைவன் தலைவியைக் காண்டலும் அவள் [illegible] அல்லது [illegible] என்று [illegible] இலக்கணங்கள் கண்டு அவள் [illegible] துணிதலும் அவளது உள்ளக் குறிப்பை யறிதலும் புணர்ச்சிக்கு முற்பட்ட நிலைகளாகும் என்பது பெரும்பான்மையோர் கொள்கை. ஐயம், துணிபு என்

166170
031 ... 22

[illegible] கைக்கிளை இலக்கணத்திற்கே சிறப்பாக உள்ளன வென்றும் [illegible] ஐந்திணை யொழுக்கத்துள் கூறப்படுதல் திணைமயக்க மென்றும் ஐந்திணையொழுக்கத்துள் அவை நிகழற்பாலன அல்ல வென்றும் இந்நூலின் உரையாசிரியர் கருதுகின்றார். காட்சி, ஐயம், தெரிதல், தேறல் என்னும் நான்கும் கைக்கிளைக்கு உரி யனவென்பது ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்துமாகும். 'முன் னைய நான்கும் முன்னதற் கென்ப' என்னும் சூத்திரத்திற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் அவ்வாறு பொருள் கொண்டார். அவர் கூறுவதாவது "களவியலிற் கூறும் கைக்கிளை சிறப்பின்மை யின் முன்னதற்குரியவெனச் சிறப்பெய்துவித்தார். இது தலைவி வேட்கைக் குறிப்புத் தன்மேல் நிகழ்வதனை தலைவனறிவதற்கு முன்னே தன் காதன் மிகுதியாற் கூறுவனவாதலிற் கைக் கிளையாயிற்று." இதனால் களவியலுள்ளும் கைக்கிளை நிகழும் என்றும், ஆனால் அஃது அத்துணைச் சிறப்புடையதல்ல வென்றும் உரைக்கிடக்கின்றது. ஆசிரியர் தொல்காப்பியனார் 'ஒத்த கிழவ னும் கிழத்தியுங் காண்ப' என்று கூறியதன்பின் ஐயம், துணிபு, குறிப்பறிதல் என்னும் துறைகளுக்குரிய இலக்கணங்களையுங் கூறியுள்ளார். ஆதலின் களவியற் றுறைகூறுங் கோவைநூலோர் இந்நான்கு துறைகளையும் முதற்கணமைத்தல் மரபாக இருக்கின் றது. ஆசிரியர் திருவள்ளுவர் ஐயம் என்னுந் துறையினைத் தகை யணங்குறுத்தல் என்னும் அதிகாரத்து முதற்பாட்டினுள் அமைத்தா ரெனினும் கோவைநூலோர் கூறுவது போல நான்கு துறைகளையும் விரித்துக் கூறினாரல்லர். கைக்கிளையொழிந்த ஐந்திணை யொழுக்கத்திற்கும் இருவர்துகாட்சியும் குறிப்பறிவும் இன்றியமையாதனவேயாகும். இருவர்பாலும் வேட்கை நிகழி னும் சொல் நிகழ்வது தலைவற்கே சிறத்தலின் தலைவனது வேட்கை உணர்ச்சியையே தகையணங்குறுத்தல் என்ற அதி காரத்துள் ஆசிரியர் திருவள்ளுவர் விதந்தோதினர். எனினும் குறிப்பறிதல் என்ற அதிகாரத்தால் தலைவியினது வேட்கையினை யும் தலைவன் கூற்றினால் புலப்படவைத்தார். ஆதலின் தகையணங் குறுத்தல், குறிப்பறிதல் என்ற இரண்டதிகாரமும் ஐந்திணை யொழுக்கத்தின்பாற்படும் தன்மையினவாகவே இறையனா

444

ரகப்பொருளுரையாசிரியர் கருத்துக்கிணங்க அமைந்துள் ளன. 'அணங்குகொல் ஆய்மயில்கொல்' என்று கூறிய பகுதி யும் தலைவியின் வனப்பைப் பெரிதும் புகழ்ந்துகூறும் கருத்துப் பற்றி யெழுந்தன வென்று கோடலும் தக்கதே. இஃதிவ்வா றிருப்ப திருச்சிற்றம்பலக் கோவையுடையார், ஆசிரியர் தொல் காப்பியனார் களவியலுட்கூறிய முறைக்கேற்பவும், உயிர் பேரின்பத்தை நாடியடைதற்குரிய நெறியினை அமைத்தற் குரிய துறைவைப்பிற் கேற்பவும் காட்சி, ஐயம், துணிபு, நயப்பு, உட்கோள், தெய்வமகிழ்தல், புணர்ச்சிதுணிதல் என் னுந் துறைகளை முதற்கண் தமது அருணூலுள் அமைத்துள் ளார். துணிபிற்குப்பின் நயப்பும், உட்கோளிற்குப்பின் தெய்வ மகிழ்தலும் பிறகோவைநூலுட் காண்டல் அரிது. இவ்வாறு பேரின்பக் கருத்திற் கேற்பத்தெய்வமகிழ்தல் முதலிய துறைகளை யமைத்தல் பேரின்பக்கருத்துணர்த்தும் குறிப்புடன் இயற்றப் பெற்ற கோவைநூல்களிலேதான் காணப்படும். திருக்கோவை யாருண்மை என்ற நூலில் அதன் பேரின்பக் கருத்து குறிக்கப் பட்டுள்ளது. அவை ஆராய்ச்சிக்கு அரியனவாகலின் விடுத்தாம்.

இறையனாரகப்பொருளுள்ளும் தொல்காப்பியக் களவியலுள் ளும் அவற்றிற் கிணங்கிய திருக்குறள் திருச்சிற்றம்பலக்கோவை யார் முதலிய நூல்களுள்ளும் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் பாங்கற் கூட்டமும் இடந்தலைப்பாடும் கூறப்பட்டுள்ளன. இயற் கைப் புணர்ச்சியினுள்ளே தெய்வப்புணர்ச்சி தலைவியிற் புணர்ச்சி என்ற பகுதிகள் கூறப்படவில்லை. ஆயின் பிற்கால நூல்களாகிய நம்பி யகப்பொருள் விளக்கத்துள்ளும் அந்நூலைத் தழுவி யியற் றப்பெற்ற தஞ்சைவாணன்கோவையினுள்ளும் இடந்தலைப் பாட்டிற்கு ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய துறைகளை இயற்கைப்புணர்ச்சியினுள்ளே தலைவியிற்கூட்டம் என்ற ஒரு பிரிவிற்கு உரியனவாகக் கூறப்பட்டுள்ளன. இயற்கைப்புணர்ச்சி யினுள்ளே இரந்து பின்னிற்றல், வழிபாடு மறுத்தல், இடை யூறு கிளத்தல், நீடுநினைந்திரங்கல், மறுத்தெதிர்கோடல் முதலி யன அமைதல் அன்பொழுக்கத்திற்கு ஏற்றதாகாது. அது பிற்காலத்தார் ஆசிரியர் தொல்காப்பியர் கருத்தினை உணராமை

யான் வந்த இழுக்காகும். நூல்செய்தார் காலத்துள்ள உலக இயலைத் தழுவி அத்துறைகள் இயற்கைப் புணர்ச்சிப் பகுதியுள் அமையப் பெற்றிருத்தல் கூடும்.

இதுகாறுங் கூறியவாற்றால் கைக்கிளைக்குரிய ஐயம் துணிபு முதலியன வின்றிக் காட்சியின் பயனாக வேட்கை மிக இருவரும் ஒத்துத் தம்முள் இயைவது அன்பொழுக்கத்திற்குச் சிறந்த இலக்கணமா மென்றும், வனப்பின் வியப்புக் காரணமாக ஐயந்தெரிதல் வேட்கைக்குறிப்பாகக் கொள்ளப்படுமென்றும், அதனால் அன்பொழுக்கத்திற்கு இழுக்கில்லை யென்றும், அன்பொழுக்கத்திற்கு முற்சார்பாக கைக்கிளை நிகழ்தல் திணைமயக்கமாய் ஆசிரியர் தொல்காப்பியனாரால் தழுவப்படுதலின் அக் கைக்கிளையும் ஒருவாறு இயைபுடைத்தாமெனவும், கைக்கிளையின் பெருக்கமாக தலைவியிற்கூட்டம் என்ற ஒரு பிரிவினைத் தழுவிக் கோடல் அன்பொழுக்கத்திற்கு அத்துணைப் பொருத்த முடையதல்ல வென்றும் அறியலாயிற்று.

இனி, வேட்கை மேலீட்டால் தலைவன் தனது வியப்பை ஐயவடிவாகச் சொல் நிகழ்த்துவதுபோல உள்ளத்துள் தலைவன் வனப்பினை வியத்தல் வேட்கைமிக்க தலைவிக்கும் இயல்பாமென்பதுணர்க. இவ்வகைத்தான தலைவன் தலைவியர் கூற்றிற்கு மேற்கோள் பெரியபுராணத்துட் காணப்படும். துணிபிற்கு முற்பட்ட ஐயந்தெரிதலை தலைவிக்குப் பொருத்தமாவதில்லை யென்று நூலோர் கொள்வர். ஆனால் வியப்புப் பற்றிய ஐயவுணர்ச்சி தலைவிக்கு நிகழுமென்பதனைக் கவி எடுத்துரைப்பதாற் போந்த இழுக்கு யாது மின்மை யுணர்க. தடுத்தாட்கொண்ட புராணத்துள் ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரைக்கண்டு வியந்ததும், பரவையார் நாயனாரது திருமேனி வனப்பினை வியந்து நினைந்ததும் இருவரது உழுவலன்பு காரணமாக வென்பது கீழ் வரும் பெரியபுராணச் செய்யுளால் விளங்கும்.

‘ கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ வறியேனென் றதிசயித்தார்.’

‘ முன்னேவந் தெதிர்தோன்று முருகனோ பெருகொளியாற்
றன்னேரின் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேயென் மனந்திரித்த விவன்யாரோ வெனநினைந்தார்’

இருவர் எண்ணங்களும் ஒன்றோடொன்று மிக்க ஒற்றுமை பெற்றிருந்தன வென்பதை ஆசிரியர் சேக்கிழார் மிகவும் நயமாக எடுத்து விளக்கியுள்ளார். சுந்தரமூர்த்திசுவாமிகள் பரவையாரை ‘ கற்பகத்தின் பூங்கொம்’ பென்று நினைத்தார். கற்பகத்தின் பூங்கொம்பென்பது இந்திரன் மகளாகிய ‘ தெய்வயானை, யைக் குறிக்குமாதலின், அதற்கேற்ப ‘ பரவையார் ’ சுந்தரமூர்த்தி சுவாமிகளை ‘ முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ’ என்றார். வள்ளிநாயகியாரைக் கூறாது தெய்வயானையைக் குறித்தது முருகப்பெருமான் முதற்கண் அவளை மணந்தமை யாற்போலும். இளமையும் அழகும் உடைய னென்று குறிக்கின்றசொல்லை முருகப்பெருமான் தமது திருப்பெயராகக் கொண்டமை போல ‘ சுந்தரன் ’ என்ற நாயனாரது திருப்பெயரும் அவரது வனப்பையும் இளமையையும் குறிப்பதாயிற்று. ஆதலின் பிறதெய்வங்களைக் கூறாது முருகப்பெருமானையே ஆசிரியர்கூறினர்போலும். இருபெண்கொண்டமையும் இருவர்க்கு மொக்கும். இனி, நாயனார் ‘ காமன்றன் பெருவாழ்வு’ என்றதற்கேற்ப ‘பெருகொளியாற் றன்னேரில் மாரனோ’ என்று நினைந்தார் பரவையார். சிவபெருமானை எதிர்த்து மன்மதன் எரியுற்றனன். நாயனாரோ எதிர்த்துப் பெரும் பயன் பெற்றனர். ஆதலின் ‘தன்னேரில் மாரனோ’ என்றார். ‘ அற்புதமோ ’ என்றதற் கேற்ப ‘ விஞ்சையனோ ’ என்றார். ‘சிவனருளோ’ என்றதற்கேற்ப ‘மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ’ என்றார். இவ்வாறு இருவர் கருத்துறவு ஒருமைப்படுதல் மிக வியக்கற்பாலதா மென்க.

(தொடரும்)

கோயில்

[பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டார்.]

கடவுள் வழிபாடு இன்ன காலத்திற் றொடங்கியதென வரையறுத்தற் கியலாவாறு தொன்றுதொட்டிருந்து வருவதாயினும், இப்பொழுது காண்கின்றபடியாக எண்ணிறந்த திருக்கோயில்கள் பல்லாயிர ஆண்டுகளின் முன் இருந்தில என எண்ணுதற்கு இடனுண்டு. யானையும், சிலந்தியும் வழிபட்டஞான்று ஆனைக்காக் கோயில் இற்றையிற்போன்று அமைந்திருத்தல் சாலுமா? கடம்பவனமா யிருந்தஞான்று மதுரைக் கோயில் எப்படி யிருந்திருக்கும்? மற்றும் பல திருக்கோயில்களின் பழைய நிலைமையும் இத்தன்மையதே. கோயில் எடுக்கத் தொடங்கிய பின்னரும் தொடக்கத்திற்றானே இப்பொழுதுள்ளவாறு மிகப்பெரிய மதில்களும், மண்டபங்களும், கோபுரங்களும் இயற்றப்பட்டில என்பது தெளிவு. அக்காலத்தில் இன்னாரின்னார் இத்துணைத் தூரத்தில் அன்றி இன்ன மண்டபத்தில் இருந்து கடவுளையிறைஞ்சவேண்டுமென்னும் வரையறை யிருந்திருக்குமோ என்பதை அறிஞர்கள் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். இச்சிறிய கட்டுரை இவற்றை யெல்லாம் ஆராய்தல் கருதியதன்று; முன்னைய நிலைமையோ இற்றை நிலைமையோ நேரிதென்றுதல் அன்றென்றுதல் காட்டக் கருதியதுமன்று; கோயிலைக் குறிக்குஞ் சில பெயர் வழக்கினையும், பிற சிலவற்றையும் தமிழ் நூல் கொண்டு ஆராய்தல் கருதியது.

இப்பொழுதுள்ள தமிழ் நூல்கள் எல்லாவற்றினும் தொன்மை யுடையது தொல்காப்பிய மென்பது தமிழறிஞர் பலர்க்கும் ஒப்ப முடிந்தது. அதன்கண் கடவுளரைப் பற்றியும், வழிபாட்டினைப்பற்றியும் பலவிடத்துக் குறிப்புக்கள் உள்ளன. ஆனால் கடவுளர் வடிவினைப்பற்றியாவது, கோயிலைப்பற்றியாவது கூறியிருப்பது புலனாகவில்லை. 'மேவிய சிறப்பி னேனோர் படிமைய' என்னும் அகத்திணையியற் சூத்திரப் பகுதிக்கு 'நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பை யுடைய மக்களையல்லாத தேவரது படிமையவாகிய பொருள்கள்' என இளம்பூரணர் உரை கூறினர். நச்சினார்க்கினியர் இங்ஙனம் கருதிற்றிலர். உயிர் மயங்கியலில் ஒகாரவீறு கூறுமிடத்தில் 'இல்லொடு கிளப்பி னியற்கையாகும்' என ஒரு சூத்திரம் இருத்தல் கொண்டு 'கோயில்' என்னும் பெயர்வழக்கு அப்பொழு திருந்ததாகக் கொள்ளப்படுகிறது. பெயர் இருத்தலின் அதற்குப் பொருளும் இருந்திருக்கவே வேண்டும். ஆயின், கோயில் என்பது அரசமனையைக் குறிக்கும் பெயராய்த் தொன்னூல் பலவற்றினும் பெருவழக்காக வழங்கி யிருத்தலின், தொல்காப்பியத்தாற் பெறப்படுவது இன்னதெனத் துணிதற் கரிதாகின்றது.

இனி, கடைச்சங்க நாளிலே யெழுந்த பனுவல்களில் கடவுளிருக்கையைக் குறித்தற்குக் கோயில் என்னும் பெயரும், வேறுபல பெயர்களும் வழங்கியுள்ளன. 'முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்கே' என்பதில் நகர் என்ப தப்பொருட்டாதல் காண்க. தேவகுலம் என்பது அப்பொருளதாதல் இறையனாரகப் பொருளுரையால் அறியப்படும் இனிப் பலவற்றையும் விடுத்து அக்காலத்துத் தமிழக வரலாறனைத்தையும் வரித்த சித்திரம் போலுள்ள சிலப்பதிகாரம் ஒன்று கொண்டு நோக்குவோம்.

சிலப்பதிகார இந்திரவிழவூ ரெடுத்த காதையில்,

'பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வே ளணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்'

எனக் கடவுளிருக்கையைக் குறிக்கக் கோயிலென்னுஞ் சொல் பயின்றுள்ளமை காண்க. ஈண்டு 'மன்னவன்' என்பதற்கு வாசவன் என்று பொருள் கொள்ளப்பெற்றுள்ளது. 'சென்றானரசன் செழுங்கோயில் வாயில் முன்' என்புழிக் கோயில் அரசமனையைக் குறிக்கின்றது.

இனி, கோட்டம் என்னும் பெயர் இக்காப்பியத்துப் பெரிதும் பயின்றுளது.

களத்திற முறைத்த காதையில்,

'அமரர்தருக் கோட்டம் வெள்ளியானைக்கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்வாயில்
உச்சிக்கிழான் கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தன் கோட்டம் நிலாக்கோட்டம் புக்கெங்கும்'

என வந்திருத்தல் காண்க. 'பத்தினிக்கோட்டம்' முதலிய பெயர்களும் காணப்படும். கோட்டமென்பது இங்ஙனம் பொதுவாக இருப்பவும், பதிகத்தில்,

'குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்கு'

என்னும் பகுதிக் குரையெழுதுங்கால், அடியார்க்கு நல்லார் 'கோட்டம் - அருகன்கோயில்' என எழுதியது என் கருதியோ? அருகன்கோயில் 'புறநிலைக்கோட்டம்' எனப் பிறிதோரிடத்துக் கூறப்பட்டிருத்தலின், அது நகர்க்குப் புறம்புள்ளதாமெனக் கொண்டு, குணவாயிற் கோட்டம் என்பதற்கு அங்ஙனம் பொருளுரைத்திருப்பரோ என ஐய முளதாகின்றது.

ஊர்காண் காதையில்,

'நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்
உவணச் சேவ லுயர்த்தோ னியமமும்
மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்'

எனப் பலபெயரும் பயின்றுள்ளன. 'நியமம்' என்பது முன் காட்டப்பெறாதது. அருகன் கோயிலைக் குறித்தற்குப் 'பள்ளி' முதலிய பெயர்களும் உள்ளன.

மேலே காட்டியவற்றிலிருந்து 'கோயில்' முதலிய பெயர் வழக்குகளே யன்றி, அக்காலத்துச் சமயநிலை பற்றிய வேறு சில செய்திகளும் வெளிப்படும். இப்பொழுது யாண்டும் காணப் படாதும், அருகியுமுள்ள கோயில்கள் பல அப்பொழுதிருந்தன. இந்திரனுடைய வச்சிரம், வெள்ளானை, கற்பகத்தரு என்பவற்றுக் கெல்லாம் கோட்டமிருந்ததும், இந்திரவிழாப் பெருஞ்சிறப்பு

டன் இருபத்தெட்டு நாள் கொண்டாடப் பெற்றதும் இப்பொழுதைக்கு அரிய செய்திகளாம். ஞாயிறு, திங்கள் என்பன நவக்கோளிற் சேர்த்தும், ஒரோவழி இறைவனை வழிபட்டமை கருதித் தனித்தும் அமைக்கப்பட்டிருத்தலன்றி, இப்பொழுது அவற்றுக்குக் கோயில் எங்குள்ளன? அந்நாளிற் பெரிதும் பயின்றுள்ள நான்கு கடவுளரில் ஒருவனாகவுள்ள பலராமன் கோயிலை இப்பொழுது யாம் கண்டிலேம்.

இனி, இங்ஙனம் பல சமயக் கொள்கைகளும் அப்பொழுது மலிந்து கிடந்தன வாயினும் சிவசமயமானது முதன்மையுடையதாகக் கொள்ளப்பெற்று வந்ததென்பது மேற் காட்டியவற்றிலிருந்தே நன்கு புலனாம். யாண்டும் சிவன் முதலில்வைத்துக் கூறப்படுதலேயன்றி, 'பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்' என, முதற்கடவுட்கு இன்றியமையாத இலக்கணத்தால் வேறு பிரித்துக் கூறப்படுதலும் காண்க.

அகம் புறம்

[க. ப. சந்தோஷம் B.A., L.T.]

(உ௮௬-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பாலைத்திணையில் பிரிதலன்றிப் பிறிதொன்றுஞ் சொல்லொணா தென்றொரு வரம்பில்லை. அதற் குடன்பட்டவற்றையுங் கூறுதல் பொருந்துமென்று முன்னோர் தெளிய விளம்பினராதலின், பிரியக் கருதி யொன்று கிளத்தலு மதன்பாற்படும். இதில் பல திணைச் செய்தி விரவி வருதல் வியப்பன்று. 'பாலை' என்ற பெயர் பால் எனுஞ் சொல்லினின்றுந் தோன்றுவது. பால் = பகுப்பு. ஆண்பால், பெண்பால், முப்பால் என்பவற்றால் அதை யறியலாகும். பகுப்பு = பிரிவு; ஆதலின் பாலை பிரிதற்கிடமாயிற்று. இதனுடன், பகல் = பிரித்தல் என்ற பொருளையுட் கொண்டு நண்பகல் பாலைக்குப் பொழுதானமையின் பொருத்தங் காண்க. பட்டினப்பாலை முழுவதும் அகத்திற் கின்பமூட்டும் அழகிய காட்சிகள் நிரம்பியுள. ஒன்றைக்கூறி மேற்செல்வாம்:

"வீட்டு முற்றங்களிலே உலரவைத்திருக்கும் நெல்லுக்குக் காவலாயிருக்குஞ் சிறு பெண்கள், ஒளிவிளங்கு நெற்றியும் கள்ளமறியாத பார்வையும், திருந்திய அணிகலங்களும் உடையர்; இவர்கள் அந்நெல்லைத் தின்ன வருங்கோழிகளை வெருட்டும் பொருட்டு எறிந்த மகரக்குழைகள் அம்முற்றத்திற் சிதறிக்கிடந்து, அங்கே சிறுபையன்கள் மூன்று உருள் உடைய சிறிய தேரைக் குதிரையின்றி இழுத்துக்கொண்டு வருகையில், அதன் உருள்களை இடறி அச்சிறு தேர் போகாமல் வழி முன்பை விலக்குகின்றன." (பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை) இக்காட்சியைக் கண்டு உளங்குளிராதவர் தமிழ்நூல்களைக் கற்றுப் பயனடையார். உரைநடையிலிது உளங்கவரும் வன்மை பெற்றிருத்தலை நோக்கச் செய்யுளின் இனிமை வெளியாகும்.

ஆங்கில நூல்களில் ஆங்காங்குப் பொருத்தம்பற்றி வரும் ஒப்புமைகளின் நயத்தையும் இயற்கையழகு நவிற்சியின் திறத்தையும் மேனாட்டு மக்கள் பெரிதும் போற்றி மகிழ்கின்றார். பத்துப்பாட்டு முழுமையும் இயற்கையழகுக்கொரு களஞ்சியமாகும். எவ்வளவுதான் அருந்தினுந் தெவிட்டாத தீங்கனியனைய சுவைநிறைந்த இயற்கையழகு கண்டு மகிழவிரும்புவோர் பத்துப்பாட்டில் அதைக் கண்குளிரக் காணலாகும். உயர் கல்வி பயிலுந் தமிழ் மாணாக்கர் பலர் தாம் பாராத மேல் நாட்டுக் காட்சிகளை ஆங்கிலத்திற்படித்து அவற்றைப்பற்றிப் பலவாறு பேசி யுவக்கின்றனர். ஆங்கிலப்புலவரின் நூல்களை வருந்திக் கற்குமாறு இவர்கள் பழய தமிழ்ச் செய்யுள்களை யுணரப்புகுவரேல் இதுவரையிற் கண்டிரா இன்பத்திலாழ்வர். தமிழைக் கற்பிப்போரிற் பலர் தமிழின் இனிமையைக் காட்ட வகையிலராயிருத்தல் இரங்கத்தக்கது. அகச்சுவையுடைய தமிழ்ப்பாடல்கள் உணர்ச்சி வகையா னூட்டப்படுமேயன்றி அறிவு வகையாற் புகுத்தப்படா. உண்மை யிங்ஙனமிருப்ப, தமிழ்ப்புலமை யுடையோரிற் பெரும்பாலர் எழுத்துக்கூறு, சொற்கூறு முதலியவற்றைப் பெரிதும் பாராட்டிக் கற்பவரை அலைக்கின்றனரேயன்றிப் பொருட்சுவைகாட்டி மகிழ்விப்பதில்லை. சிறியேனுக்குத் தமிழ் புகட்டிய பெரியோர் ஒருநாள், வகுப்பிலுள்ள பிள்ளைகள் புணரியல் கற்

றுச் சிறிது சலிப்புற்றிருத்தலைக் குறிப்பாலறிந்து, பத்துப்பாட்டில் நெடுநல்வாடையிலுள்ள சில வியற்கையழகு நவிற்சியை எடுத்துக் கூறிய காலை எளியேனுள்ளம் பள்ளத்து வழி வெள்ளம்போலோடியதை ஒருபோதும் மறவேன். அந்நாட்குப்பின் பலவாண்டுகளெனக்குத் தமிழ் பயில இடங்கிடைக்கவில்லை; ஆயினும், அன்று கேட்டவை உள்ளத்தை விட்டகன்றதில்லை. எங்ஙனமாயினு மப்பாடலைக் கற்கவேண்டுமென்றெழுந்த அவாவினால் ஏழாண்டுகட்குப் பின் அதைப் பிறருதவியின்றிப் பார்க்கலானேன். அதிற் கூறியிருப்பவை முற்றுமெனக்குப் புலப்படவில்லையாயினும் குளிரின் கொடுமையும் வாடையின் நடுக்கமும் உணர்ச்சிக்கேறின. பின் பன்முறை பயில்வதற்கஃதோர் தூண்டுகோலாய் நின்றது. சிறுவர்கள் உளம் புறப்பொருளிற் படியுமாறு அறநெறி புகலுஞ் செய்யுள்களிலும் எழுத்தியல் புணரியல்களிலும் உறையாது. 'மட்குடம்', 'கற்றீது' என்று புணரியலுக்கு எடுத்துக்காட்டாகக் கூறுஞ் சுவையிலாச் சொற்கள் இளைஞர் நெஞ்சில் தங்கா; தங்கினுங் கொழுகொம்பில்லாக் கொடிபோல் இடர்ப்படும். ஆகையால், சுவை நிறைந்த பாடல்களைத் தெரிந்தெடுத் தவற்றின் வழியாய்ச் சொற்கூற்றை விளக்கித் தமிழில் ஆவல் பெருகச் செய்யவேண்டும். தேனின்சுவையறியாதவனுக்கு அதை எடுக்கும் முறை கற்பித்தாலவன் கூர்ந்து கேளான். தேனின் இனிமையை உண்டு கண்டவனே உடலை வருத்தி உயர் மரமேறி யதைக் கவரவும் பின்வாங்கான். முன்னோர் இயற்றிய நூல்களால் இது இனிது விளங்கும். வலியவற்றை எளிதாக்கிக் காட்டுவதை விட்டு, எளிதிலறியக் கிடப்பனவற்றைக் கடுவகையிற் கையாடி, தமிழை நினைந்து இளைஞர் நெஞ்சொடுங்கச் செய்தல் யாதுபயனைத் தரும்? இது நிற்க.

உள உணர்ச்சிக்கேற்ப இயற்கையை யமைத்துக் காட்டுதலால் அவ்வுணர்ச்சி மிகுதியும் வலியுறுமென்பதைப் பாலைத்திணையின்பாற் கண்டோம். குறிஞ்சியையு மவ்வாறு நோக்குதல் நன்று. தட்பமிகுந்த நாடுகளில் வாடை வீசுங் கூதிர்நாள் நஞ்சு போலஞ்சி வெறுக்கப்படும். உறைபனி தெருக்களிலும் வீடுகள் மேலு மமர்ந்து, விசும்பெங்கு மிருண்டு தோன்ற முகில்

மூடி, இலையற்ற மரங்கள் வெறுங் கிளைகளுடன் பட்டனபோல் நிற்க, வெளியின் புற்றூனுந் தலைகாட்டா தொடுக்குங் குளிர் காலம் மேனாட்டாருக்குச் சாலவுங் கொடிய காலமாகும். நமக்கோ, மழை, முகில், நீர், நிழல், பனி, ஓடை, பொய்கை, குளம், கடல், அலை, நுரை, ஆறு, நுரை, ஆறு, ஊற்று, சுனை, வாய்க்கால், மதகு, ஈரம், தட்பம், பசுமை, புனலாடல், நனைதல் ஆறுதல், தணிதல், குளிர்தல் ஆகிய இவை பெரும்பாலும் இனிமையையே தரும். “அவன் கருங்குழற் கற்றை மருங்கு திருத்தி, அளகமும், நுதலும் தகைபெற நீவி, ஆகமுந்தோளும் அணிபெறத் தைவந்து, குளிர்ப்பக் கூறித் தளிர்ப்ப முயங்கிப் பிரிவலென்று வலித்தான்” (இறையனாரகப் பொருளுரை). இஃதனைய உரைகளால் அவ்வினிமை யுணரப்படும். ஆதலின் மலைச் சாரலையுங் கூதிர்ப்பொழுதையும் நள்ளிரவையும் ஒன்றாக்கிப் புணர்தலோடு பொருத்தினர் முன்னோர். குறிஞ்சித்திணை களவுப் புணர்ச்சிக்குச் சிறந்ததாகலின, மக்கள் நடமாட்ட மில்லாத மலைப்புறமும் ஒருவரும் வெளிவரா கூதிர்ப்பொழுதும் கொடிவிலங்குகள் விழித்துத் திரியும் நள்ளிரவும் அதற்குத் துணையாயின.

திருந்திழாய் கேளாய் நம்மூர்க்கெல்லாஞ் சாலும்
பெருநகை யல்கனிகழ்ந்த தொரு நிலையே
மன்பதை யெல்லா மடிந்த விருங்கங்கு
லந்துகிற் போர்வை யணிபெறத் தைஇநம்
மின்சாயன் மார்பன் குறிநின்றேன் யானாகத்
தீரத்தறைந்த தலையுந்தன் கம்பலுங்
காரக்குறைந்து கறைப்பட்டு வந்துநஞ்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானைத்
தோழிநீ போற்றுதி யென்றி, யவனாங்கே
பாராக் குறழாப் பணியாப் பொழுதன்றி
யாரிவ ணின்றி யெனக்கூறிப் பையென
வைகாண் முதுபகட்டிற் பக்கத்திற் போகாது
தையா றம்பலந் தின்றியோ வென்றுதன்
பைக்கழித்துக் கொண்டீ யெனத்தாலும் யாதொன்று

வாய்வாளே நிற்பக் கடிதகன்று கைமாறிக்
கைப்படுக்கப் பட்டாய் சிறுமிநீ மற்றியா
னேனைப் பிசாசருளென்னை நலிதரி
னிவ்வூர்ப் பலிநீ பெறுமற் கொள்வே னெனப்
பலவுந் தாங்காது வாய்பாடி நிற்ப
முதுபார்ப் பானஞ்சின னாத லறிந்தியா
னெஞ்சா தொருகை மணற்கொண்டு மேற்றூவக்
கண்டே கடிதரற்றிப் பூசறொடங்கின னாங்கே,
யொடுங்கா வயத்திற் கொடுங்கேழ்க் கடுங்க
ணிரும்புலிக் கொண்மார் நிறுத்த வலையுளோ
ரேதில் குறுநரி பட்டற் றாற்காதலன்
காட்சி யழுங்க நம்மூர்க் கெலாஅ
மாகுலமாகி விளைந்ததை யென் றுந்தன்
வாழ்க்கை யதுவாகக் கொண்டமுது பார்ப்பான்
வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து. (குறிஞ்சிக்கலி - 65)

இதிற் குறிஞ்சி நில ஒழுக்கம் அதற்கேற்றபொழுதுடன் கூறப்பட்டது. “மன்பதை யெல்லா மடிந்த விருங்கங்குல்” என்பதனால் நள்ளிரவும், “அந்துகிற்போர்வை யணிபெறத்தைஇ” என்பதனால் குளிர்காலமும் பெறப்பட்டன “ஒடுங்கா வயத்திற் கொடுங்கேழ்க் கடுங்கண் இரும்புலி கொண்மார் நிறுத்த வலையுளோர் ஏதில் குறுநரி பட்டற்றால்” என்ற ஒப்புமையால் மலைப்புறத்தின் அணிமை பெறப்பட்டது. இப்பாடலில் காதலன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்த தையல் ஒரு பார்ப்பான் கண்ணிற்பட்டு அவனால் வருத்த மெய்தியதைக் காட்டுகின்றது. இங்ஙனம், மக்களாலும், விலங்குகளாலும் இருளாலும், நிலவாலும், காவலராலும், உறவினராலும் வரக்கூடிய தடைகளை மேற்கொண்டு கூடுவது களவியலுக்கு மிகுதியும் பொருத்தமானது. ‘நிழலருமை வெய்யிலிலே நின்றால் தெரியு’மென்பது பழமொழியாதலின் காதலரிருவர் தமது கருத்துக்கு முரண்பட்ட யாவற்றையும் விலக்கித் தம்மைப் பிரிக்கவெழுந்த இடையூறுகளை யொதுக்கி யொருவரை யொருவர் பார்ப்பது அதிக வின்பத்தை யளிக்கு மென்பது எளிதிலறியப்படும். மலை என்பது விலங்கு;

விலங்கு குறுக்கே வளர்வது. காதலனும் காதலியும் சேர்வதற்குக் குறுக்காய் நிற்கும் பலசெய்திகளை நோக்கி, மலை புணர்ச்சிக்கிடமாயிற்று. அன்றியும், குறுக்கிடுதல் = எதிர்ப்படுதல்; குறுகலா = பகைவர், பொருந்தாதவர்; ஆகையினால், குறுகுதல் = அணுகுதல், பொருந்துதல், கூடுதல், புணர்தல்; அது நடக்குமிடம் குறிஞ்சி. குறிச்சி = குறுகிய ஊர், சிற்றூர், மலைப்புறத்துச் சிறிய ஊர். இவற்றால் நிலத்திற்குந் திணைக்குமுள்ள தொடர்பு ஒருவாறு புலப்படும். மேற்கூறியவற்றால் நமது தமிழ் முன்னோர் இயற்கையை மக்களினின்றும் பிரித்துத் தனியாய்க் கூறினாரல்லர் என்பது தெற்றெனத் தெரியும். மக்களுக்கு வரும் நன்மை தீமைகளாற் பிறக்கும் மகிழ்தல், இரங்கல் முதலியவற்றோடு பொருந்த வைத்து இயற்கை யழகை யுரைப்பதே தமிழ் மரபு. அதாவது இயற்கையை இருக்குமாறு உரையாது அது இருக்கவேண்டியவாறு உரைப்பது. (Describing Nature not as it is, but as it should be.) இங்ஙனம், இயற்கையைத் திரித்தாள்வது தகுமோவென்று சிலர் ஐயுறலாம். வையகத்திற்கும் வானகத்திற்கும் உயிராய் நின்றிலங்கும் இறைவனது தன்மையைத் தம் மகத்தடக்கிய மக்களின் பெருமையைக் கருதி இயற்கையை அவர்கள் உளப்பான்மையுடன் ஒன்ற வைத்தல் தவறாகாது.

இதுகாறும் கண்டவற்றால், குளிர்காலத்தில் மலைச்சிறையிற் புணர்தலும், முதுவேனிற் பாலையில் பிரிதலும் ஏன் நிகழவேண்டுமென்பது காட்டப்பட்டது. இவை பிறவிடத்திலும் பிறபொழுதிலும் நிகழாதோ? எனின், இவை எவ்விடத்தும் எப்பொழுதும் நிகழும், என்றாலுமவற்றை நூலிற் கூறப்புகின் பெரியோர் வகுத்தவாறு கூறவேண்டுமென்பது. யாதுபற்றி யவ்வாறு கூறவேண்டுமென்று கடாவின்; நூலியற்றுதல் ஓவியமெழுதலை யொத்த ஒருளத்தொழில், உளத்தின்கட் டோன்றிய காட்சிகளை ஓவிய வல்லான் நிறத்தில் எழுதி வெளிப்படுத்துகிறான்; மொழிவல்லான் சொற்களில் வெளிப்படுத்துகிறான். இருவரும் அகத்தில் தோன்றியதையே புறப்படுத்துகின்றனர். ஒரு பட்டினத்தின் சிறப்பைக் காட்ட வெழுதிய ஓவியத்தில் அழகிய

மாளிகைகளுங் கோவில்களும் கல்விமன்றங்களும் கண்ணுக்கினியவை விற்குங் கடைத் தெருக்களும் நன்மக்களுந் தோன்றுவர்; அது கொண்டு அப்பட்டினத்தில் இடிந்த வீடுகளுங் கோழியாடு கொல்லப்படு மிடங்களுங் குருடர் முடவர் முதலியோருமில்லையென எவருந் துணியார். ஓவியப்புலவன் தன் கருத்திற்கேற்பப் பட்டினத்துள்ள சிலவற்றை நீக்கிச் சிலவற்றைக் குறைத்து வேறு சிலவற்றைப் பெருக்கி எழுதுவான். இதனாலவன் உள்ளத்தை யுள்ளவாறு சொல்லவில்லையெனக் கற்றோர் குற்றங் கூறார்.

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என வள்ளுவர் கூறி யிருப்பதைக் கருதி அவர் பிறவறஞ் செய்யாதிருத்தல் நன்றென விளம்பினாரென்று பொருள் கொளல் குற்றறிவாகும். கொண்ட நோக்கத்திற்கேற்ப ஒன்றைக் குறைத்தும் வேறொன்றைக் கூட்டியுஞ் சொல்வதியல்பு. இதற்கிசையவே புணர்தல் பிரிதல் முதலியவை உலகில் எக்காலத்தும் எவ்விடத்தும் நிகழினும் கற்றுணர்ந்தோர் அவற்றை இடம் பொழுது செய்தியுடன் சேர்த்துக் கூறி இனிமை யூட்டுவரென்க.

(தொடரும்)

ஏடுதேடல்

[சீயாழி. ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை]

1903-௵ மேமீ 25௳ மதுரைத் தமிழ்ச் சங்கத்து வருஷோற்சவக் கூட்டத்தில் 'ஏடு தேடல்' என்று அடியேன் பிரசங்கித்த விஷயமும், அதன்பின் ஸ்ரீமாந். பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் திருவாளர் எம். ஆர். கந்தசாமிக் கவிராயரவர்களை அத்துறையினியோகித்த ஏற்பாடும் அன்பர் பலரும் அறிவர். இதன் முன்னரும் பின்னரும் தமியேன் ஏடு தேடி வருங்கால், சிறந்த பல பல தாளபத்திர ஸ்ரீகோசங்கள் ஸ்ரீகாழி

ஸ்ரீமாந் கி. சிதம்பரநாத முதலியாரவர்களது திருமாளிகைப் புத்தக நிலயத்துக் காணப்பெற்றேன். அப்பிராசீந கோசங்களில் ௧௨ சைவத்திருமுறைகளும், ௧௪ மெய்கண்ட சாத்திரமும் ௧௪ பண்டார சாத்திரமும் சிற்றம்பல நாடிகள் சாத்திரக் கொத்தும், சதமணிக்கோவையுட்பட ௨௭ சிவஞான நூல்களும் பிறவும் உள. இவற்றுள் சிவஞானபோத முதலிய சைவ நூல்களின் தத்துவார்த்தமும் துகளறுபோதச் செய்யுளும் அந்நூற்குச் சிறந்ததோர் குறிப்பும் சில தேவாரப் பதிகங்களும் இற்றைவரை அச்சுக்கு வாராதன இவ்வேடுகளைக் 'செல்வி' யபிமானிகள் நோக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

[ப. அ. மு.]

P. S. மேற்கண்ட சைவநூற்க ளன்றி, கம்பராமாயணம் ௭௩ பிரதிகளும், குருபாம்பரை ௨ காண்டமும், ஸ்ரீகோசம் ஆறுயிரப்படியும், பகவத் கீதையும், பரமாசாரிய சுவாமிகள் ஸ்ரீ மணவாளமா முநிகள் விஷயமும், உபதேச ரத்தினமாலையும் ஆழ்வார் திருநகரி சடகோபரந்தாதியும், மணவாள மாமுநிகள் நூற்றந்தாதியும், நூற்றெட்டுத் திருப்பதிக் கலித்துறையும், மஹா புராணமும், முக்கூடற் பள்ளும், அருஞ் சொல் விளக்கமும், இலக்கண விளக்கமும், திருவானைக்காவுலாவும், வருண குலாதித்தனுலா மடலும் உள்ளன. இவையும் பிரதி பேதங்களை யுற்று நோக்குவார்க்குப் பெரும்பய னளிப்பனவாம்.

திருப்பாசுரம்

[வேலூர். C. S. இராஜாப் பிள்ளை]

(௲௪௩-ம் பக்கத் தொடர்ச்சி)

முதன் மூன்று பாசுரங்களிற் பல வகையாக விரித்துக்கூறப் பெற்ற அவ் விறைவன், யாவரானும் இத்தகைய னெனத் துணியக் கூடாதவனாக நிற்றலின், அவனது மாண்பும், அடியார்க்கருளுந் திறனும், சொல்ல வொண்ணாததாய், எல்லையின்றி விரியு மென்றெண்ணிப், பிரமபரத் தலைவர் "ஆட் பாலவர்க் கருளும் வண்ணமும், ஆதி மாண்புங் கேட்பான் புகிலளவில்லை கிளக்க வேண்டா" எனத் திருவாய்மலர்ந்ததை விளக்கிச் சேக்கிழார் பெருமான்"

"ஆதி யாட்பா லவர்க்கரு ளுந்திறம்
நாதன் மாட்சி கேட்க நவிலுங்கால்
ஓது மெல்லை யுலப்பில வாகலின்
யாது மாராய்ச்சி யில்லையா மென்றதாம்"

என விளக்கினாரென்க. இறைவ னியல்பு சொல்ல வொண்ணாதெனினும் திருவடிஞானங் கைகூடப்பெற்று, திருவருள் வழிநின்று, விரும்பிக் கேட்பா ராயின், அவர்தம் வினைகளனைத்தும் வேரறுக் கெட்டொழிதல் துணிபாகலின், அதனை வற்புறுத்திப் புகலிவேந்தர் "தக்கார் கோட்பாலனவும் வினையுங் குறுகாமை எந்தை தாட்பால் வணங்கித் தலை நின்று கேட்க" என்று மொழிந்தருளியதைத் தொண்டை நாட்டுத் தூயோர்,

"அன்ன வாதலி னாதியார் தாளடைந்
தின்ன கேட்கவே ஏற்றகோட் பாலவும்
முன்னை வல்வினை யும்முடி வெய்துமத்
தன்மை யார்க்கென் றனர்சண்பை காவலர்"

எனப் பொருள் விரித்தனர்.

ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்கு
சோதிக்க வேண்டா சுடர்விட் டுளனெங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே

(இ-ள்) எங்கள் சோதி மயமாகிய அச்சிவன் சுடர்மாத்திரமாய் நிற்கின்றுனாகலின், காட்சி, அநுமானம், ஆகமம் முதலிய பிரமாணங்களாலும், எடுத்துரைக்கும் மொழிகளாலும் ஆராய்தல் வேண்டா. சாதுக்களே! நீங்கள் அவனை மனத்திற் பற்றுங்கள். அவனைச் சாருங்கள். அல்வாறுயின் உங்கள் பெரிய துன்பத்தினின்றும் நீங்குவீர்கள் (எ - ம்)

"ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச் சோதிக்க வேண்டா" என்பது, மூழுமுதற்கடவுளாகிய பரசிவப்பெருமான், கண் முதலிய இந்திரியங்களாற் காணுங் காட்சியளவைக்கும், கண்ட ஏதுவைக் கொண்டு காணுத பொருட்களை ஊகித்தறியும் அநுமான அளவைக்கும், மெய்ம்மொழியாகிய ஆகம வளவைக்கும் அப்பாற்பட்டவனுய், ஒப்பும், உயர்வுமின்றித் தானே தனக்கு நிகராக நிற்பவ னெனப் பொருள்தருதலின், தொண்டர் புராண முடையாரும் இதனை,

"மன்னு மேதுக்க ளாலெனும் வாய்மைதான்
தன்ன தொப்புவே றின்மையிற் சங்கரன்
இன்ன தன்மையை ஏதுஎடுத் துக்காட்
டன்ன வற்று ளப்பில னென்றதாம்"

என விளக்கினர்.

"சுடர்விட் டுளனெங்கள் சோதி" என்பது புறவிருளை நீக்கிப் புறவொளியாய்த் திகழும் அக்கினிபோல ஆன்மாக்களின் வியாபக ஞானத்தை இருட்படலம்போல் மறைத்துநிற்கும் அக விருளாய ஆணவத்தை நீக்கி உள்ளொளியாய் விகற்ப மில்லாத சுடர் மாத்திரமாய் நிற்கின்று னெனப் பொருள் தருமாகலின் சேக்கிழார் சுவாமிகள்,

சென்னை-600 0..

தோன்று காட்சி சுடர்விட் டுளனென்ப
தான்ற வங்கிப் புறத்தொளி யாயன்பின்
ஊன்ற உள்ளெழுஞ் சோதியாய் நின்றனன்
என்று காண்பார்க் கிதுபொரு ளென்றதாம்"

எனப் பகர்ந்தனர்.

"மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்" என்பது சுடர்விட் டொளிரும் அவ்விறைவனை அன்பினுற் பிணித்து அகத்தே நிறுவி ஞானக்கண்ணுற் கண்டு, இரவும் பகலும் எந்நேரமும் ஓய்வின்றிச் சிந்தை செய்யின் அவாது விபரீத உணர்ச்சியைத் தரும் பிறவிப்பிணி நீங்குமென்று பொருள்படுதலின் பெரியபுராணமும்,

"மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்று மென்ப
தாதிச் சுடர்ச்சோதி யையன்பி னகத்துள் ளாக்கிப்
போதித்த நோக்குற் றெழியாமற் பொருந்தி வாழ்ந்து
பேதித்த பந்தப் பிறப்பின் னெறிபேர்மி னென்றும்"

என அருளிய தென்க.

இவ்வாறு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களினின்று தாம் விரும்பிய எல்லாப் பேறுகளையும் பெறுவோரே சாதுக்க ளாகலின் "சாதுக்கள் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே" என்பதைச் சேக்கிழார்,

"ஈண்டு சாதுக்க ளென்றெடுத் தோதிற்று
வேண்டும் வேட்கைய வெல்லாம் விமலர்தாள்
பூண்ட வன்பினிற் போற்றுவீர் சார்மினென்
றூண்ட சண்பை யரச ரருளினர்"

என விளக்கி யருளினர்.

ஆடும் மெனவு மருங்கூற்ற முதைத்து வேதம்
பாடும் மெனவும் புகழல்லது பாவ நீக்கக்
கேடும் பிறப்பு மறுக்கும் மெனக்கேட் டிராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்ட லாமே.

(இ-ள்) அப்பெருமானுடைய திருவடிஞான சபையில் நின்று ஐந்தொழில் நடனம் புரியும் என்றும், யாவராலும் வெலற் கரிய இயமனை உதைத்ததென்றும், வேதங்களாற் புகழப்படுகின்றதென்றும், தனக்கொரு புகழ்கருதாது ஆன்மாக்களைப் பற்றிய இருள் அகலவேண்டுமென்ற ஒன்றே கருதி எழுந்த பெருங் கருணையானே, அவர்கட்குண்டான துன்பத்தையும், மாறாது மேன்மேலும் உற்பத்தியாகின்ற பிறவியையும் நீக்கும் என்றும், பெரியோர் கூறக் கேட்டலால் அத்திருவடியை அவனது திருவருளெனக் கூறுவதன்றி வேறியாதெனக் கூறல் பொருந்தும் (எ.ம்)

உலகத்திற் சாமானிய மனிதர்களாலும், கற்றறிந்த மேன் மக்களாலுஞ் செய்யப்படுவனவாகிய எல்லாச் செயல்களும், தம் பயனும் புகழுமே கருதி என்பது எல்லாரும் பெரும்பாலும் ஒப்புக்கொள்ளுதற் குரியதேயாம். கைலையைப் பேர்த்த இராவணன் மீண்டு சாமவேதத்தாற் புகழ அவற்குப் பேரும் பெரும்படையோடீந்தான் இறைவனென்பதை நோக்க இஃதொரு வியப்புமன்று இதுபற்றியன்றே "புகழ்ச்சி விருப்பன் போலும், இகழ்ச்சியறியா என்பணிவோனே" எனப் பெரியாரும் பணித்தனர்.

இறைவன் புகழ்ச்சி விருப்பனாயினும், அம்பலத்தாடுவதும், அறங்கூற்ற முதைத்ததும், கேடும் பிறப்பும் அறுப்பதுமாகிய இவையெல்லாம், கைம்மாறு வேண்டா கார்முகிலனைய பெருங் கருணையாலென்பதே இப்பாசுரத்தின் கருத்தாகலின் பெரிய புராணமும்,

ஆடும் மெனவாந் திருப்பாட்டி னமைத்த மூன்று
நீடும் புகழோ பிறர்துன்ப நீத்தற்கோ வென்று
தேடு முணர்வீ ருலகுக் கிவைசெய்த தீசர்
கூடுங் கருணைத் திறமென்றனர் கொள்கை மேலார்

என அருளிச்செய்ததாம்.

கடிசேர்ந்த போது மலரான் கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண் டங்காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலை யறவெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ண மறிவார் சொலக்கேட்டு மன்றே.

(இ-ள்) வாசனை பொருந்திய மலர்களைக் கையிற்கொண்டு, நல்ல நிலத்தில் தாபித்த சிவலிங்கப் பெருமானுக்குப் பாலாபிடேகஞ் செய்து, அர்ச்சனை செய்யுங்காலத்து, அப்பூசனையின் பெருமையுணராது இடையூறு செய்த பிதாவினுடைய தன் மிடியாற் பன்முறை வணங்கப்பெற்றதாளை இற்றுப்போகும்படி வெட்ட பெருமான் அவரைத் தம் மடியிற் சேர்த்த வரலாற்றினை அறிவினர் சொல்லக் கேட்டோம்.

சிவபெருமானிடத்து உண்மையன்புடைய தொண்டர்கள் யாவராயினும், அவர் செய்வன வெல்லாம் தானெனு முனைப்பின்றித் தலைவ னருள்வழிப்பட்டுச் செய்கின்றனவாகலின், அவை அவர் செயலாகாது இறைவன் செயலேயாகும். வேள்வி முதலிய நற்கருமங்களும் அவனருளின்றித் தானெனும் முனைப்புடன் செய்யப்படுமாயிற் பயன்தரா. துன்புமுந் தரும் என்பது.

"அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீய தாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே"

என்னும் பிரமாணத்தால் உணரக் கூடியதாகலின் சேக்கிழார் பெருமானும் இப்பாசுரத்திற்கு,

"கருதுங் கடிசேர்ந்த வெனுந்திருப் பாட்டி லீசர்
மருவும் பெரும்பூசை மறுத்தவர்க் கோறல் முத்தி
தருதன்மைய தாதல் சண்டீசர் தஞ்செய்கை தக்கோர்
பெரிதுஞ் சொலக்கேட் டனம்என்றனர் பிள்ளை யார்தாம்"

எனப்பொருள் கூறினர்.

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவ ரேத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூத னொலிமாலை யென்றே கலிக்கோவை சொல்லே.

(இ-ள்) வேதங்களாற் புகழ்ந்து கூறப்படுகின்ற அம்முதல்வனே எல்லாப் பொருள்கட்கும் முதல்வனாகி உலகந் துன்ப நீங்கித் தன்னை ஏத்துமாறுதானே அவ் ஆன்மாக்களுக்கு நாயகனாகின்றான். அவனது பெருமையை வேதங்களே போற் புகழ்வன புராணங்களும் (எ - ம்)

சிவபெருமானது பொதுவியல்பு சிறப்பியல்புகளை அவராருளிய வேதங்கள் புகழ்வது போலவே பதினெண் புராணங்களும் உலகத்தவர் துன்ப நீங்குமாறு புகழ்ந்துபோற்ற ஆடி எடுத்த பாதமே யாவற்றினுஞ் சிறந்து நிற்பதென அத்திருவடிப் பெருமையே கூறலின் அவையும் வேதத்தோ டொப்புடையன வென்பார்,

வேத முதல்வ னெனுந்திருப் பாட்டினினேர்
ஆதி யுலகோ ரிடர்நீங்கிட வேத்த வாடும்
பாத முதலாம் பதினெண் புராணங்க ளென்றே
யோதென் றுரைசெய் தனர்யாவும் ஓதா துணர்ந்தார்

எனப்பொருள் கூறினர்.

பாராழி வட்டம் பகையா னலிந்தாட்ட வாடிப்
பேராழி யான திடர்கண் டருள்செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்ட வர்க்குப்
போராழி யீந்த புகழும் புகழுற்ற தன்றே.

(இ-ள்) கடல் சூழ்ந்த வட்ட வடிவமான இப்பூமி பகைவனாகிய சலந்தரனாற் கலக்கப்பெற்று வாட்டமுற, உலகத்தை காக்குந் திருமால் சிவபெருமானை வழிபட்டு அத்துன்பத்தை நீக்கக் கருதித் தான் பள்ளி கொண்ட பாற் கடல் நீங்கிப் பூமியையடைந்து இடைவிடாது நினைக்க அவர்க்குச் சக்கர மருளியதும் இறைவற்கு ஒரு பெரும் புகழாயிற்று (எ - ம்)

காத்தற் கடவுளாகிய திருமாலும் தனக்குச் சலந்தரனால் விளைந்த இன்னல் நீங்கித் தந்தொழிலைச் செவ்விதி னடத்தத் துணைபுரிந்தது சிவபெருமான் திருவருளே என்பது இப்பாசுர உள்ளக்கிடை யாகலின் சேக்கிழாரும்,

பாவுற்ற பாராழி வட்டத் திருப்பாட்டி னுண்மை
காவற் றொழிலா னெனுங் கண்ணனுங் காவல்பெற்ற
தியாவர்க்கு மேலாய வீசனரு ளாழி பெற்று
மேவுற்ற சீருற் றது வென்றனர் வேத வாயர்

என விளக்கினர்.

திருவீழிமிழலை தேவாரம்

“தருப்ப மிகு சலந்தரன்றனுட றடிந்த சக்கரத்தை வேண்டி யீண்டு, விருப்பமொடுமால் வழிபாடு செய்ய விழி விமானஞ் சேர் மிழலையாமே” என்பதும் ஈண்டு கவனிக்கத் தக்கது.

மாலா யவனு மறைவல்ல நான்முகனும்
பாலாய தேவர் பகரில்லமு தூட்டல்பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதா யெழுந்த
வாலால முண்டங் கமரர்க் கருள்செய்த தாமே.

(இ-ள்) இன்னும் அத்திருவருளைப் புகழுமிடத்து காற்றினால் அசைக்கப்படுகிற கடலைக் கடந்த திருமாலும், பிரமனும் ஏனைய தேவர்களும் அமிர்தம் உண்ணுமாறு செய்து, அக்கடலிற் றோன்றி அவர்கட்கு அச்சம் விளைத்த விடத்தைத் தாமேயுண்டு தேவர்கட்கு அருள் செய்ததனாலும் பெருமை பெற்றதென்க.

இரு வினைப் பயன்களாகிய இன்பத் துன்பங்கள் உயிர்களாகிய நமக்கே யன்றித் தமக்கு எஞ்ஞான்று மில்லையாயினும், நீ துன்ப முற்றும் பிறர்க்கு நலமே புரிக என நமக்குச் செய்கையான் உணர்த்தத் திருவுளங் கொண்டே இறைவன் துன்பந் தரும் விஷத்தைத் தாம் உண்டு, இன்பந்தரு மமிர்தத்தை அஞ்சி வந்த அமரர்க்களித்தனர் என்பதே இப்பாசுரக் கிடையாகலின் பெரிய புராணமும் இதனை,

“மாலா யவனென்ன வருந்திருப் பாட்டின் மாலுந்
தோலா மறைநான் முகனுந் தொடர்வா மமரர்
ஏலா வகைசுட்ட நஞ்சுண் டிறவாமைக் காத்த
மேலாங் கருணைத் திறம்வெங் குருவேந்தர் வைத்தார்”

என விளம்பிற்று.

அற்றன்றி யந்தண் மதுரைத் தொகையாக்கி னானுந்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் விரவும் பண்பு நோக்கிற்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானு மன்றே.

(இ-ள்) அதுவுமன்றி அழகிய குளிர்ச்சி பொருந்திய மதுரையிற் றமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டியன் தெளிந்து தேற்றியுந் தேறாத ஈனர்களாகிய அமணர்கள் வைகை நதியில் ஏடெதிர்த்துச் செல்லுதலைக் காண்பாராயின் இடப வாகனத்தையுடைய சிவபெருமானே சிறந்த பெருமானென் றுணர்வர் (எ-ம்)

மதுரைமாநகரத்தில் தமிழ்ச் சங்கந் தாபித்துத் தமிழை வளர்த்த பாண்டியர் தாம் உண்மை யுணர்ந்து உணர்த்தவும், திருவருள் கூடாமையின் உணராத சமணர்கள் ஏடெதிர் செல்லக் காண்பரேல், சிவபெருமானே முதற் கடவுளென்றும், அவ்விடத்துச் செய்யுமன்பே பயன் தருதலின் அதுவே சிறந்ததென்றும் இப்பாசுரத்தால் உணரப்படுதலின் சேக்கிழாரும்,

ஆனவற் றன்றி யென்றவத் திருப்பாட்டிற் கூடல்
மாநக ரத்துச் சங்கம் வைத்தவன் தேற்றத்தேறா
ஈனர்க ளெல்லைக் கிட்டவேடு நீரெதிர்த்து செல்லில்
ஞான மீசன்பா லன்பே யென்றனர் ஞானமுண்டார்

என அருளினார் என்க.

நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தனல்ல
எல்லார்களும் பரவு மீசனை யேத்துபாடல்
பல்லார்களு மதிக்கப் பாசுரம் சொன்னபத்தும்
வல்லார்கள் வானோருல காளவும் வல்லாரன்றே.

(இ-ள்) எல்லா நலனும் நிரம்பிய பெரியோர்கள் வாழுகின்ற புகலிப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தனாகிய நான் அந்நல்லோரனைவருந் துதிக்கின்ற சிவபெருமானைப் புகழ்ந்து பாடிய பலராலும் மதிக்கப்படுகின்ற பாசுரங்களை ஓதவல்லவர் இம்மை

யிலும், மறுமையிலும் மேன்மை பொருந்திய அரசாட்சி பெற்று வாழ்வர் (எ-ம்)

"விண்பொ யதனால் மழைவிழா தொழியினும் விளைவுதான் மிகவுடை
மண்பொ யதனால் வளமிலா தொழியினுந் தமதுவண் மைவழுவார்
உண்ப கரவா ருலகி னூழிபல தோறுநிலை யானபதிதான்
சண்பைநக ரீசனடி தாழுமடி யார்தமது தன்மை யதுவே

என்றும்,

"இருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி யைவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்

பிரமபுரம்" என்றும் பலவிடங்களில் தாம்புகழ்ந்ததற்கேற்ப ஈண்டும் "நல்லார் சேர் புகலி" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

தாமருளிய பாசுரத்திற்குத் தாமே பயன் கூறுவது பொருந்துமோ வெனின்:—

கல்வி யறிவு நிரம்பிய புலவர்கள் போலன்றி, சிவபெருமான் திருவருளால் எல்லா வுலகமும் ஈடேறும் பொருட்டே பூமியில் அவதரித்த பெருமான் ஆகலின் கூறுதல் அமைவுடைத்தே யென்க.

திருஞானசம்பந்தப்பெருமான் தாமருளிய எல்லாப் பதிகங்களிலும் முதல் ௫, ௬ பாடல்களினால் சிவபிரான திலக்கணங் கூறி அடுத்த சில பாடல்களினால் மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற் கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளுமெனக் காட்ட அரக்கனாகிய இராவணனுக்கு அருள் புரிந்ததையும், சிவபெருமான் அன்புடன் தொழுவார்க்கு எளியரும், ஏனையோர்க்கு அரியரும் என்ப துணர்த்த, பிரம விட்டுணுக்கள் பறவையுங் கருவிலங்குமாய்த் தேடியதையும், அயற்றுறைகள் யாவும் பழியையே தருமென்பது காட்ட சமண புத்தர்களுடைய மதத்தையும் எடுத்தியம்பியும், இவைபோன்ற

பல உதாரணங் காட்டியும், அப்பால் பதிகத் திருக்கடைக்காப்புச் செய்தல் மரபாகலின், இத்திருப்பாசுரப் பதிகத்தும் ௯—எ அ—௯—0 இப் பாசுரங்களால் சண்டீசர்க்கும், திருமாலுக்கும், தேவர்கட்கும், மார்க்கண்டர்க்கும் அருள் செய்த விதத்தைக் கூறியருளினர்.

ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் அருளிய திருப்பாசுரப் பொருள் விளக்குந் திருப்பாடல்களைக் கொண்டு ஆராயுமிடத்து 'வாழ்க அந்தணர்' எனத் தொடங்கிய திருப்பாசுரங்களால் உணரக் கூடியன எவை யெனின்:—

உலகந் தழைத்தற் கேதுவாகிய வேத நூலொழுக்கமும், உயிர்கள் வீடு பேறெய்தற் கேதுவாகிய சைவ மெய்ந் நெறியொழுக்கமும், இவற்றிற்கு அந்தணர் தேவ ரானினங்களே காரண மாதலும், இவை கூறும் வாயிலான் வேதாகமங்களிற் கூறப்படுந் தூல சூக்கும உபாசனைகளும், தகரோபாசனையும், ஐந்தெழுத்தாற் புரியும் ஞான பூசையும், இறைவனது பொதுவியல்பு, சிறப்பியல்புகளும், அவன் அஷ்ட மூர்த்தியாய் நிற்குமாறும், சுடர் வடிவமாமாறும், வழிபடுவார் வினைகளையும், பிறவிகளையும் அகற்றுந் திருவருள் மாண்பும், முதலு முடிவுமில்லாத அநாதிப் பொருள் என்பதும், அவ்விறைவன் அடியார்க்கருளல் பலவகைப் படுதலின் இவ்வாறென்றுணரக்கூடாமையும், அடைந்தோர் பேரின்பமும், அல்லாதார் பெருந் துன்பமும் உறுவர் என்பதும், தாதையை வென்ற சண்டீசர் முதலியோர்க்கு அருளிய புகழும், கைம்மாறற்ற பெருங் கருணையும், பரம உபகாரமும் உடையரென்பதும், அவர் பாற் செய்யும் அன்பே எல்லாப் பயனும் அளித்தலாற் சிறந்த தென்பதும், ஆகிய பல அரும் பொருள்களாம் என்க.

திருவருட் பெருஞ்செல்வராகிய சேக்கிழார் சுவாமிகளே இப்பாசுரங்களுக்குப் பொருள் கூறி முடித்து,

கழுமலப் பதியில் அவதரித்த திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த திருப்பாசுரத்தை அவர்களது திருவுள்ளக் கருத்துணர்ந்து கூறினேனல்லேன். சிறியேனுடைய அறிவுக்கு அவரது திருவருள் உணர்த்திய நெறியே கடைப்பிடித்து, எனது மிகுந்த அன்பினால் தெறிந்தவாறு வழிபட்டுக் கூறினேன் என முடிக்குங்கால் ஒன்றுக்கும் பற்றாத சிறியேன் எவ்வாறு கூறுவேன். நிற்க.

வைகை நதியில் இத்திருப்பாசுரங்களை எழுதித் திருவுடைப் பிள்ளையார் தந்திருக்கையாலிட்ட வேடு மருவிய பிறவியாற்றின் மாதவர் மனஞ்சென்றாற்போல் பொருபுனல் வைகையாற்றி லெதிர்த்து நீர் கிழித்துப் போகும் இருநிலத்தோர்கட்கெல்லா மிதுபொருளென்று காட்டி முதற்பாசுரத்தில் "வேந்தனும் ஓங்குக" என்றதனாற் பாண்டியரது கூனும் நிமிர்ந்தது.

எம்பிரான் சிவனே யெல்லாப் பொருளுமென் றெழுது மேட்டிற்
றம்பிரா னருளால் வேந்தன் றன்னைமுன் னோங்கப் பாட
அம்புய மலராள் மார்ப னனபாய னென்னுஞ் சீர்த்திச்
செம்பியன் செங்கோ லென்னத் தென்னன்கூ னிமிர்ந்த தன்றே.

முற்றிற்று

ஒரு குறளுண்மை விளக்கம்

[ஜலகண்டபுரம் அ. வரதநஞ்சைய பிள்ளை]

(முன் ௨௬௯-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவனை மனமுருகப் பற்றிநிற்கும்போதுண்டாம் இன்பத்தை ஒருசேர விழுங்கியும், நமக்குத் தெரிவிக்கும் பெருங் கருணையால் திருவாய்மலர்ந்து

கனியினும் கட்டிபட்டகரும்பினும்
பனிமலர்க் குழற்பூவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளும் அரசினும்

இனியன் தன்னடைந்தார்க் கிடைமருதனே, எனச் சமயாசாரியப் பெருந்தகையார் சாற்றினர், அச்சுவையைப்பெறுதற்கு முயலாமையின், வேம்புவக்கும் ஒட்டகம்போல் விடய

போகச் சழக்கில் வீழ்வதனையே விழைகின்றோம். பழக்கம் பற்றி என்க

இதுகாறும், 'வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந் தார்க்கு இடும்பையில' என்பதனைக் காரணத்துடன் ஆய்ந்தனம். இனி, 'யாண்டும் இடும்பையில' என்றது எங்ஙனம் அமையும் என்பது பற்றிக் கூறுவகூறி இதனை முடிப்பாம். ஈண்டு இடும்பை என்னுஞ் சொற்கு மூவகைத் துன்பங்கள் எனப் பரிமேலழகர் உரை கூறினர். அம்மூவகைத் துன்பங்கள், அத்யாத்மீகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம் என்பன. உயிர்ப்பொருட் களாலும் இடி மின்னலாதி உயிரிஃபொருட்களாலும், காரண மின்றி ஊழ்வினையாலும் நேருவனவாகிய துன்பங்களாம்? இவை கள் எக்காலத்து முளவாகா என்றல் அமையாது. என்னை? இறை வனடி சேர்தல் மாத்திரையானே விருப்பு வெறுப்பற்று, வரும் பிறவிக் குலங்கள் கெடுவனவே யன்றி, எடுத்த வுடம்பு இவ்வுல கில் உடலூழ் கழியுங்காறும் நம்மனோரைப் போலத் துன்பப் பகுதிகட்கு விருந்தளித்தே தீர்தல்வேண்டும். இது நியம மாகலின் எனின் ?

நன்று கூறினை! தம் முழுமனவுணர்ச்சியையும் இறைவ னுக்கே செலுத்தி அவ்வுணர்ச்சியில் தம்மை முற்றும் மறந்து இரண்டற நின்ற பேரருட் பெருஞ்செல்வர்கள் எத்துணைத் துன் பம் எய்தினும் " நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" "காயத்திருவாய் நின்னுடைய கழற்கீழ் வைப் பாய்" "இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை" "தன் கடன் அடியேனையுந் தாங்குதல்—என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று அருளிச் செயல்களின்படி நவ நவமாய் உள் ளத்தெழும் பேரானந்தப் பெருங் கடலிற் குளித்து அவசமுற்று எங்கும் பரமே தோன்றப் பார்த்திருக்கும் அவசரத்தில் தம் முடற் கெய்தும் இன்ப துன்ப வுணர்ச்சிகள் சிறிதும் தோன்றா மையின் அவ்வின்ப துன்பங்களை ஆக்கும் வினைகள் தன்று முட்டிய சுரீஇப்போலத் திகைத் தோடுவனவன்றிப் பகைத் தாடுவன வல்லவாதலானும், இங்ஙனம் தம்மையே சார்ந்த மெய்

யன்பர்கட்கு எய்தும் உடலூழை ஏற்கின்றான் ஈசன் என்பது சைவ சித்தாந்த நூற்றுணிபாதலானும், குணங்கள் தாமில்லா அவ்வின்பத்தைக் குறுகிய அவர்க்கு யாதோர் குறையும் நேரா மையானும் அவ்வுடலூழ் சற்றுத் தாக்கிக் கைப்பொருளில்லா னைப் புறக்கணித்து நடக்கும் கணிகையர் குழாம்போற் கால் காய்ந் தொதுங்குமாதலின் எக்காலத்தும் துன்பமின்மைதேற்ற மென்க.

துன்பமே தோற்றாச் சுகவாழ்க்கை. கடவுளைக் கருது வோர்க் குண்டாமென்றறிந்தேம். அவ்வின்பத் தோற்றம் எவ் வியல்பிற்று? என வினவுதிரேல், அஃதுணர்வார்க்கே யுணர்ந் தோம் என்னும் அறிவு அவிழ நின்றனுபவிக்கும் பெற்றித்தாக லின் சொல்லிற் கடங்காதென்க "உரையுணர் விறந்து நின் றுணர்வ தோருணர்வே" "கண்டுங் கண்டிலன் என்ன கண் மாயமே" எனப் பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம் மூழ் கிய புனிதன் மொழியாலிதன் அருமை யுணர்க. அற்றாயினும் வினவினீர்க்கு ஒருவாறு விளங்க உத்தரம் கொடுக்கும் கடப் பாட்டால், ஒன்று உவமையாகக் காட்டுகின்றேன்.

கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பர் துறக்கவின்பத்தின் இயல் பை இலங்கையின் பெரும்போகத்தைக் கண்ணுற்ற அநுமன் கூற்றில் வைத்து மொழிகின்றனர்.

" மாண்டதோர் நலத்திற்றாமென் கணர்ந்துதல் வாய்மைத்தன்றால்
வேண்டிய வேண்டினெய்தி வெறுப்பின்றி விழைந்துதுய்க்கும்
ஈண்டரும் போகவின்ப மீறில தியாண்டுக் கண்டாம்
ஆண்டது துறக்கமஃதே:யருமறைத் துணிபுமம்மா"

இக்கவியின் திரண்ட பொருள், இலங்கையின் போகம் எத்தகையது என வினவுவோர்க்கு, அது மிகவும் சிறப்புற்ற பெருவள முடையது, என ஒரு வார்த்தையில் கூறுவது. உண் மையை உள்ளபடி உரைத்ததாகாது, துறக்க இன்பம் நேரொக் கும் என்பேன், இங்ஙனம் கூறுங்கால் தெரி பொருளுவமை கூறித் தெரியாப் பொருளை விளக்கவேண்டும், என்னும் தர்க்க

னுக்கு முரண்படுமாதலின், துறக்கவின்பமும் இன்னவாறே அமைந்ததென உணர்த்தவேண்டும். அதனைப் பல பகுதிப்பட ஓதுவேனேல், சொல்லுமெனக்கும் கேட்கும் அவர்க்கும் எளிதாகவிருக்கும், ஒருவர் எதை வேண்டுமென அவ்வப்போது கருதுவாரோ அவ்வெல்லாம் நினைத்தவுடனே கைப்படக் கிடைத்து, அவ்வளவு சுலபமாகக் கிடைத்ததனால் அதன் அருமை குன்ற அநுபவிப்பவர்க்குவெறுப்புமுண்டாகாமல், அடையுமுன்னம் என்ன காதல் அதனிடத்திருந்ததோ அக்காதல் சிறிதும் குறைபாடிலாமலே அநுபவித்து, அவ்வாறு மற்றும் பலர் அநுபவிப்பதானால் தன் பெருமிதம் குறையுமாதலால் தனக்கன்றிப் பிறர்க்குக் கிடைத்த லரிதென்னும் கருத்துடன் அவ்வநுபவம் முற்றும் பூரண இன்ப மயமாய், அங்ஙனமிருப்பினும் இவ்வின்பம் மற்றோர்கால் எனக்கு கிட்டுவதரிதாங் கொலோ என எண்ணிக் கவலுறாதபடி அத்தனையும்அழியாதுஎன்றும்நித்தமாய்ப் இருக்கப் பெறுமேல் அவ்வகை யின்பம் யாண்டு பெறுகின்றோமோ அதனையே துறக்கம் என்னலாம். வேதம் புகலும் துறக்கவின்பம் இப்பெற்றித்தேயா மன்றோ, என அநுமன் தன் மனத்தோடு புகன்றனன் என்பதாம்.

நெல்லொக்கும் புல் என்றாற் போல இதனை ஒருவாறு இன்ப வுவமானமாகக் கொள்க.

முற்றிற்று.

புறநானூறும் தமிழர் மாண்பும்

[திரிசிரபுரம், ம. பெரியசாமிப்பிள்ளை]

(முன் ௪௨௰-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்ஙனம் 'யாண்டு பலவாக' அவர்கள் நட்பும் பெருகி வளர்ந்ததெனினும் இறுதிக் காலம்வரை ஒருவரை யொருவர் கண்டிலர் ஆயினும் ஒருவர் உள்ளத்தை ஒருவர் நன்கறிந்துள்ளார். இத்தகையவர் நட்பின் திறத்தை என்னென் றியம்புவது! கீழ்வரும் அரிய செய்யுள்களாலன்றி வேறு வகையில் இயம்புதல் சாலாது.

வடக்கிருந்த கோப்பெருஞ் சோழன் [வடக்கிருத்தல்-யாதானும் ஓர் காரணம் பற்றி உலக வாழ்க்கையை வெறுத்து ஊண் உறக்கமின்றி வட திசை நோக்கியிருந்து உயிரை நீத்தல்] 'பிசிராந்தையார் என் நிலைமையை அறிந்து இப்போதே இங்கு வந்து என்னுடன் வடக்கிருப்பார்; ஆகலின் அவற்கு இடனொழிக்க' எனத் தன்னைச் சூழ்ந்திருந்தாரை நோக்கிக் கூறுபவர் "பிசிராந்தையார் உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருத்தலே யன்றி சிறிது பொழுதும் கண்டதில்லை; பல ஆண்டுகளாகத் தவறின்றி மருவி வந்த உரிமையை உடையோராயினும் அரிதே தலைவா! அதன்படி ஒழுகுதல்" என்று கருதி ஐயங் கொள்ளாதீர், நிறைந்த அறிவினையுடையீர்; அவன் என்னை என்றும் இகழ்ந்திலனாய் இனிய குணங்களை யுடையான்; பிணிப்புண்ட நட்பினை உடையான்; புகழழிய வரும் பொய்ம்மையை விரும்பான்; தனது பெயரைப் பிறர்க்குச் சொல்லும்போதும் 'என் பெயர் பேதைச் சோழன்' என்று எனது பெயரைத் தனது பெயராகச் சொல்லும் மிக்க அன்பு பொருந்திய உரிமையையும் உடையன்; அதன்மேல் இப்படி யான் துயரமுறுங் காலத்து ஆண்டு நில்லான், இப்பொழுதே வருவன்; அவனுக்கு இடமொழிக்க' என்பதனை,

"கேட்டல் மாத்திரை யல்ல தியாவதும்
காண்டல் இல்லா தியாண்டு பலகழிய
வழுவின்று பழகிய கிழமைய ராயினும்
அரிதே, தோன்றல்! அதற்பட ஒழுக'லென்
றையங் கொள்ளன்மின், ஆரறிவாளிர்,
இகழ்விலன் இனியன்; யாத்த நண்பினன்;
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே;
தன்பெயர் கிளக்குங் காலை என்பெயர்
பேதைச் சோழன்' என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன்; அதன்றலை
இன்னா தோர் காலை நில்லலன்,
இன்னே வருகுவன்; ஒழிக்க அவற் கிடமே." (புறம்·௨௧௯)

எனக் கூறினர். என்னே! இவருக்கிருந்த நட்பின் திட்பம், இங்ஙனம் கோப்பெருஞ் சோழன் கூறியவாறே பிசிராந்தையார்

ரும் அங்கு வந்தனர். அதுபோது அங்கிருந்தவரும் சோழனது மற்றொரு நண்பரும் ஆகிய பொத்தியார் என்ற அறிஞர் அவ்விருவருக்கும் உள்ள நட்பின் திறத்தினை வியந்து 'நினைக்கும் காலத்து வியக்கும் தன்மையுடையது, மிகுந்த சிறப்பினையுடைய இவன் (பிசிராந்தையார்) அதனைக் கைவிட்டு ஈங்குவரத் துணிதல்; அதனினும் வியக்கும் தன்மையுடையது. வேற்றரசனது நாட்டின்கண் விளக்கம் அமைந்த சான்றோர் பாதுகாத்துப் புகழ் மேம்பாடாக நட்பே பற்றுக்கோடாக இத்தன்மையான ஓர் துன்புறுங் காலத்து ஈங்குவருதல். இவ்வாறு வருவனென்று துணிந்து சொல்லிய வேந்தனது பெருமையும் அவன் சொல்லியது தவறாது வந்தவன் அறிவும் வியக்குந்தோறும் வியக்குந்தோறும் வியப்பு அளவு கடந்தது; ஆதலால் தன் செங்கோல் செல்லாத (பிறர் ஆளுகையில் உள்ள) தேயத்து உறையும் சான்றோனது (பிசிராந்தையாரது) நெஞ்சத்தைத் தனக்கு உரிமையாகப் பெற்ற பழைய புகழை உடைய [illegible]னை (சோழனை) இழந்த இவ்வுலகம் ; என்ன துன்பமுறுமோ! இது இரங்கத் தக்கது' என்பதனை

"நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே,
எனைப் பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்;
அதனினும் மருட்கை யுடைத்தே, பிறனாட்டுத்
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி
இசை மரபாக நட்புக் கந்தாக
இனையதோர் காலை ஈங்கு வருதல்.
வருவன் என்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே;
அதனால், தன்கோல் இயங்காத் தேயத்துறையும்
சான்றோன் நெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அன்னோனை இழந்த இவ் உலகம்
என்னா வதுகொல் அளியது தானே." (புறம் - உகஎ)

எனப்படிப்போர் மனம் கசிந்துருகுமாறு மொழிந்தனர். நட்பின்எல்லைக்கு ஈண்டுக் கூறப்பட்ட செய்திகளின் மிக்கதாய்

வேறுஇருத்தல் கூடுமோ? யாண்டும் என்றும் கூடாது. ஆகவின் நட்பாட்சியில் மிகச் சிறந்து விளங்கியவர் தமிழர் என்க.

(தொடரும்)

பழந்தமிழ்

[மாக்றல். கார்த்திகேய முதலியார்.]

(௩௨௨-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்.

சுலா, குடா, கலா, நிலா, பலா, சிலா, குலா, கரா, மாலா, வநிதா முதலிய ஆகார ஈற்றுச் சொற்கள் நாவிற் கெளியனவாகவின் அவை முதலுண்டாய பழந்தமிழ்ச் சொற்களாம்.

சுலா = திர[illegible]. "சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழலாகி" (அ—தே) முலம், கால், தொல், கலம், நால், கணம், பச முதலியனவும் பழந்தமிழ்ச் சொற்களாம். முலம் = வேர், முளை. முலம்—முலை = கொங்கை, குழந்தையை வளர்ப்பதென்பது. முலம் = வளர்ச்சியுமாம். முளையினின்று வளர்ச்சியுண்டாதலால் முலம், வளர்ச்சியை யுணர்த்திற்று.

(1) முலம்—மூலம் = வேர். முலம் மூங்கி லியைபுடைச் சொல். மூலம் காரணமுமாம்; வேர் போல்வதென்பது.

(1) முலம்—முளம் = மூங்கில், கணு, வேர்; முளை.
(2) முளங்கை—முழங்கை = கணுவுடைய கையென்பது.
(3) முளம்—முளவன் = சிறுவன். முளவி = சிறுமி.
(4) முளம்—முள = மூங்கில், முளை.
(5) முளம்—முளை = மூங்கில், முளை.

முளையென்பது முதல் மூங்கிலையும் மூங்கிலில் கணு இருத்தலால் கணுவையும், கணுவினின்று முதல் வேரும் பிறகு முளையும் உண்டாதலால் வேரையும் முளையையும் உணர்த்தும்; வித்

தினின்று கீழ் நோக்குவது வேர்; மேனோக்குவது முளை வித்தின் கண்ணும் கணு இருத்தலால், அக்கணுவினின்றுதான் வேர் முதலியன உண்டாகின்றன. முருங்கை முதலியவற்றின் கண்ணும் கணுவினின்றுதான் தளிருண்டாகின்றது. கொடிகளிலும் கணுவினின்றுதான் மற்றோர் கொடி கிளைக்கின்றது. பிரண்டை, அலரி, மல்லிகை, முல்லை முதலியவற்றின்கண்ணும் கணுவினின்றுதான் வேருண்டாகின்றது. உருளைக் கிழங்கை நாலைந்து பத்தைகளாகப் பிளந்து நடின் ஒவ்வொன்றிலும் கணுவினின்றுதான் முளையுண்டாகும். கணு = பொருத்து.

பொருத்து னடுவில் முளையுண்டாகின்றது.
முலம் = வேர். முலம்—முல = முள்ளங்கி. (இந்து)
மூலம்—மூலகம்—முள்ளங்கி ÷ ஓர் கிழங்கு.

இங்ஙனம் சொல் வளர்ச்சியும் பொருள் வளர்ச்சியும் பெருகுமாறு உணர்ந்து கொள்க.

கால் = வேர். முளை முதலியன. கான்மரம் = ஆலமரம், விழுதுவிடுகின்றமரமென்பது. கால் + மரம்; விழுது=வேர். கீழ் நோக்குகின்றமையின் விழுது வேராகின்றது.

தொல் = வேர், முளை முதலியன. தொன்மரம் = ஆலமரம். தொல் + மரம்=விழுதுவிடுகின்ற மரம். தொல் - மூங்கிலியைபுடைச் சொல்.

தொல்—தோல் = மூங்கில், யானை. மூங்கில் போலும் உட்டுளைக்கை யுடையதென்பது. கணுவினின்று முளையுண்டாதலால் தோல் முளையுமாம். தோல்—தோற்றம்—தோன்றல் = முளைத்தல். தோல்—தோரம் = வாயில், உட்டுளையுடையது. மூங்கிலில் உட்டுளை யிருத்தலால் தோல், தோரமெனத் திரிந்து உட்டுளையை யுணர்த்திற்று.

தோரம்—தோரை = மூங்கிலரிசி. (தெலுங்கு)
தோரம்—தோரமு = வாயில்.
தோரம்—த்வாரம் = வாயில் (ஆரியம்)

தோரம்—தோர் = கதவு. (பெங்காளி முதலியன)
தோரம்—தூரா = ” (கிரீக்கு)
தோர்—டோர் = ” (ஆங்கிலம்)

தோரம்—தோரணம் = வீதியிற்கட்டுந் தோரணம். வாயிலிலிருந்து கட்டுவதென்பது.

தோரம்—தோரணம் = உட்டுளை.

தோரணக்கல் = ஏரியுள் மதகின்மேற் கல். அதில் துளையுள்ளது.

கலம் = மூங்கில், ஆரியத்தில் வேறுபட்டுள்ளது.

கலம்—களம் = மூங்கில், மிடறு, மூங்கில்போலும் உள்ளுளையுடையது.

களம்—களை = மூங்கில்
கழை = ” —கழாய் = மூங்கில்
நால் = மூங்கில், வேர், முளை, வளர்ச்சி முதலியன.
“நாலின் குருந்தம்” (வைத்தியம்)
நாறு = முளை. நால் + து = நாறு. து. விகுதி.
நாற்சி = வளர்ச்சி. ஞாற்சி = வளர்ச்சி
நாலம் = ஞாலம் = பூமி, வளர்வது.
நாலல் = பிடுங்கி நடல். வேரூன்றச் செய்தலென்பது.
நால்—நாளி = தென்னை. மூங்கிலினமென்பது. (போ—நி)
நாளி = தென்னை. (ச—தே)

நால் = முளை. நால்—நாரி = பெண். கருக்கொள்வோளென்பது.

நால் = வளர்ச்சி. நால்—நாரி = பார்வதி. உயிர்களை வளர்ப்பவளென்பது.

நால் = மூங்கில். நாலல் = வளைதல், தொங்கல். நெடிய மூங்கில் வளைவதியல்பாகலின் நாலலென்பது வளைதலை யுணர்த்திற்று.

கணம் = தீ. மூங்கிலில் உண்டாவதென்பது.
கண் = மூங்கில்
கணப்புச் சட்டி = நெருப்புச் சட்டி.
கணம்—கனல்—அனல்—அனலம் = தீ
கனல்—அனல். ஒற்றுநீக்கமென்னு மிலக்கணம்.

பசம் = இளமை. பசங்கள் = சிறுவர்கள்.

பசம்—பச்சை—பச்சைக் குழந்தை = இளங் குழந்தை.

வழுதலை = பார்ப்பார முள்ளி.

வள் = கூர்மை. தலம் = இலை.

வளுதலம்—வழுதலை = முள் நிறைந்த இலையுடையதென்பது.

வழுதலம்—வழுதளம்—வழுதணம்—வழுதணை — வழுதணங்காய் = கத்தரிக்காய். முள்ளியி னினமென்பது.

இக்காலத்து வழுதுணையாயிற்று. "வாகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்"

சம் = பிறப்பு அதாவது உண்டாதல்.

தலைச்சம் பிள்ளை = முதல் பிறந்த பிள்ளையென்பது.

மரீசம் = மிளகு. வைகாசி மழையா லுண்டாவதென்பது.

மாரிசம்—மரீசம்—மிரியல் = மிளகு.

"திரங்கலு மிரியலு மிளகே" (பி—கி)

மரீசி—முசீ—முசிரியாயிற்று.

முசிரி = மேல் கடற்கரையிலுள்ள ஓர் துறைமுகம்.

சேரர்க்கு முக்கிய பட்டணங்களிலொன்று. யவனர்கள் மிளகு முதலியன ஏற்றுமதி செய்ய இதுவே ஏற்ற பட்டினமாக இருந்தது. மிளகு மிகுதி,

"சேரலர்—சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங் கெழுமுசிரி" (அகநானூறு)

வடநூலார் மரீசிபத்தனம், முசீ பத்தன மென்பர்.

சம்—ஷம் ஆயிற்று, செயற்கை யுச்சரிப்பு.

பக்கம்—பச்சம்—பட்சம்—பக்ஷம்.

பகு—பக்கம். வலம் இடம் என்னும் இரு பிரிவுடையது.

"பச்சமும் வலியும் கருதிய அரக்கன்" (ச—தே) ககரம் சகரமாகும்.

அட்டை = கவனிகை. அக்காலத்து நூல்களைப் படம் போலச் சுருட்டப் படுவதால் அதற்குக் கவனிகை வைத்துச் சுருட்டப்படுவ தென்பது பொருள்.

(தொடரும்)

நாமகள் அருச்சனை அகவல்

[யாழ்ப்பாணம் க. சோமசுந்தரம் பிள்ளை]

பொன்மகள் கொழுநனும் புத்தேள் கூட்டமும்
மன்மலை கட்டு மதித்திட வெழுந்த
தெளிவள ரமுது மொளிவளர் பளிங்கு
முருக்கி வார்த்தன்ன திருக்கிளர் மேனியு
மருண்மழை பொழியும் வரிநெடு விழிகளும்
வாங்கிய புருவமும் பூங்குமிழ் நாசியும்
முத்தமிழ் மதுரப் புத்தமு தொழுகும்
பவளவாய் மலருந் தவளவா ணகையுங்
காரிருள் கடந்த வாரிருங் கூந்தலும்
பொன்புனை களனும் மென்பணைத் தோளும்
மாலையு நூலும் யாழு மேந்திய
வாலிய காந்தண் மலரொரு நான்கும்
சந்தணி தனமுந் தந்தன விடையும்
நெஞ்சி லன்புடனே நினைதொறு உஞ்சலைக்குள்
செஞ்சிலம் பலம்புஞ் சேவடி யிணையும்
வெண்பட் டாடையுந் தண்முத்த மாலையும்
ஆராக் காதலொ டனுதினநோக்கினுந்
தீராப் புதுமைத் தெய்வத வடிவுமாய்
வெண்டா மரைமேல் வீற்றிருந் தருளுந்
தண்டா முத்தமிழ்த் தாயே போற்றி
சங்கரன் மலர்த்தாள் தவமுனி வேண்ட
அங்கவ னருளிய வமுதே போற்றி

அறுமுக னருள்பெறு சிறுமுனி மடியிசைக்
குறுகுறு நடந்த குருந்தே போற்றி
பூவினின் மேவிய புத்தேள் பொய்யா
நாவினின் மேவிய நங்காய் போற்றி
அல்லியல் கண்டத் தானிட மமரும்
வல்லிதன் கண்ணாய் வதிந்தாய் போற்றி
பூமகள் கேள்வன் புரத்தினிற் பொருந்தும்
மாமக ளொருமரு மகளே போற்றி
ஆடக மதுரை யருந்தமிழ்ச் சங்கக்
கூடலின் வளர்ந்த கொம்பே போற்றி
மன்னுயிர் நாவெனும் வாவியின் மலர்ந்த
பொன்னறி யாநறும் பூவே போற்றி
தென்னவன் சேரன் செம்பிய னென்னும்
மன்னவர் மூவர் வாழ்வே போற்றி
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நான் கெல்லை யகலிட மாளும்
பண்ணப் பெருமைப் பார திபோற்றி
மெய்ந்நா விரும்பும் வித்தகி போற்றி
எந்நாட் டவர்க்கு மிறைவி போற்றி
பொருப்பிலே பிறந்து புகழிலே கிடந்து
நெருப்பிலே நின்று நீரிலே தவழ்ந்தென்
சென்னியி னுவிற் சிந்தையிற் கலந்து
மன்னிய கருணை வாரிதி போற்றி
உள்ள நெக்குருக வுரோமஞ் சிலிர்ப்ப
வெள்ளநீர் கலுழ மெய்விதிர் விதிர்ப்ப
நாத் தழுதழுப்ப நயந்துநின் றுன்புகழ்
ஏத்துநர் நெஞ்சத் திருள்கெடுத் தருளித்
தேனினும் பாலினுந் தெவிட்டா தினிக்கும்
வானினுங் காணா மணியே போற்றி
கல்விசற் றில்லாக் கசடனே னென்னையும்
வல்லிதி னாண்ட மயிலே போற்றி
சிறுமையும் பிணியுந் தீவினை யிருளும்

வெறுமையுஞ் சீய்த்த வெயிலே போற்றி
மேவிய பல்கலை விரிபொழி லிருந்து
கூவிய வேழிசைக் குயிலே போற்றி
"கற்றவர் விழுங்குங் கனியே" போற்றி
மற்றவர் காணா மலையே போற்றி
சேணினு மறியாத் திருவே போற்றி
காணினு மினிக்குங் கரும்பே போற்றி
விண்ணகப் புலவர் வெட்கி வாயூற
மண்ணகத் தெழுந்த மருந்தே போற்றி
கண்ணே போற்றி கருத்தே போற்றி
எண்ணே போற்றி எழுத்தே போற்றி
சுடுபிணி மாற்றிய சுடர்க்கொடி போற்றி
கடுவிடந் தீர்த்த கனங்குழை போற்றி
கூடிய சமணர்கள் கூர்ங் கழுவேற
ஏடெதி ரேறிய வேந்திழை போற்றி
ஆருயிர் வௌவி யருளினை போற்றி
சீரிய ஞானச் செழுஞ்சுடர் போற்றி
செங்கலைப் பொன்னாய்ச் செய்தனை போற்றி
அங்கமும் வேதமு மறைந்தனை போற்றி
என்பினைப் பெண்ணா யெடுத்தனை போற்றி
வன்பிணி மாற்று மருளே போற்றி
அரும்பொரு ளின்ப மறங்கதி நான்குந்
தரும்பெருங் கற்பக தருவே போற்றி
அயனுடன் சேர்ந்துல களிப்பாய் போற்றி
புயனுடன் கலந்தவை புரப்பாய் போற்றி
அரனுடன் புணர்ந்தவை யழிப்பாய் போற்றி
ஊனுடை நெஞ்சி லொளியே போற்றி
பூவொடு மணமும் போன்றாய் போற்றி
பாவொடு பழகிய பாவாய் போற்றி
ஆவியை யுருக்கு மன்பே போற்றி
பாவியைத் தூக்கும் பதத்தாய் போற்றி
மானே போற்றி மடப்பிடி போற்றி

தேனே போற்றி தெளிவே போற்றி
அழியா தூழியு மமர்ந்தாய் போற்றி
பழியாச் செழுநிதி படைத்தாய் போற்றி
நோக்கரு நுண்ணுணர் வானாய் போற்றி
வாக்கொடு மனமு மடங்காய் போற்றி
ஊமைக் குரைதரு முத்தமி போற்றி
சேமக் கலையின் செறிவே போற்றி
கல்லொடு வாரிதி கடந்தாய் போற்றி
சொல்லொடு செம்பொரு ளானாய் போற்றி
பொள்ளா முத்தின் பொலிவே போற்றி
உள்ளார் நெஞ்சத் தொழித்தாய் போற்றி
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளக முருக்குந்
தெள்ளிய பாகின் றிரளே போற்றி
கம்ப னருளிய கவிச்சுவை மாந்திச்
செம்பொற் சிலம்பருள் செய்தாய் போற்றி
இந்தணி செஞ்சடை யிறைவனை யிருளிற்
சுந்தரன் றூதாய்த் தூண்டினை போற்றி
கொழிதமிழ்க் கொங்கு சேரனைக் கூறிக்
கிழிதனை யறுத்த கிளியே போற்றி
உயிரே போற்றி யுணர்வே போற்றி
செயிர்தீ ரறிவின் செல்வீ போற்றி
ஔவைக் கருந்தமி ழருளிய மதுரக்
கொவ்வைக் கனிவாய்க் கொடியே போற்றி
ஆதியு மந்தமு மகன்றாய் போற்றி
சோதிமெய்ஞ் ஞானச் சுடரே போற்றி
முழுதுல காண்ட முதல்வீ போற்றி
பழுதறு செஞ்சொற் பகர்ந்தாய் போற்றி
அன்னக் கொடியுடை யரசி போற்றி
வன்னக் கொடியிடை மடவாய் போற்றி
ஓரெழுத் தறியா வொருவ னென்னையுஞ்
சீரிய கல்விச் செழுநிதி யுதவித்
தெரிவன தெரிந்த செல்வர் கோட்டிக்

குரியவ னாக்கிய வொண்ணுதல் போற்றி
மறைபிணி கதவந் திறந்தாய் போற்றி
குறைதவிர் கோமளக் கொழுந்தே போற்றி
நிதியே போற்றி நிறைவே போற்றி
கதியே போற்றி கசிவே போற்றி
பொன்னே போற்றி புலனுணர் விறந்த
மின்னே போற்றி விளக்கே போற்றி
அன்னிய மொழிகளு மடிதொழு தேத்த
மன்னிய சிந்தா மணியே போற்றி
எழுதா நான்மறை யென்று நின்றேங்கத்
தொழுதகு தமிழ்மறை சொன்னாய் போற்றி
பழமையும் புதுமையும் படைத்தாய் போற்றி
எழுமையுந் தொடர்தரு மின்பே போற்றி
சினத்தொடு புத்தனைச் செறுத்தாய் போற்றி
மனத்துயர் நீக்கும் மாதே போற்றி
நாவலங் கோலாய் நடத்தினை போற்றி
பாவலங் காரப் பழம்பொருள் போற்றி
அரும்பொரு ளீந்து மானாய் போற்றி
விரும்புதல் வெறுத்தல் வேண்டாய் போற்றி
முதலையுண் டிறந்த முதிர்சுவைக் குதலை
மதலையை வாவென வழைத்தாய் போற்றி
நாளுங் கோளும் நலிமிடி பிணியும்
பாழும் வினையும் பறிப்பாய் போற்றி
பாமகள் போற்றி நாமகள் போற்றி
பூமகள் போற்றி புகழ்மகள் போற்றி
முத்தமிழ்க் கல்வியும் நாற்கவிப் புலமையும்
ஐம்புல னடக்கமு மறுமுகற் கன்பும்
எழுவகைப் பிறவியு மெம்மைவிட் டகலா
தெண்வகைச் சித்தியு மெங்களுக் கருளி
இன்பினுந் துன்பினு மிரவினும் பகலினும்
அன்புடன் காத்தரு ளன்னாய் போற்றி
எல்லா வுலகமு மானாய் போற்றி

யாவையு முடனு யறிவாய் போற்றி
அறிந்தருள் செய்யு மணங்கே போற்றி
அறிவினு ளருளா லமர்ந்திருந் தெனக்குக்
குறைவறு புலமை கொடுப்பாய் போற்றி
குறைவறு புலமை கொடுத்திடக் கூறும் ௧௨
நறுந்தமிழ் மாலை நயந்து கொண்டருளி
எவருங் காணு தெங்கணு நிறைந்த
மூவா விளநலங் காட்டி முன்னின்றே
அஞ்சலென் றருளிட வேண்டும்
பஞ்சணி நூபுர பாதபங் கயமே.

தமிழின் பெருமை

[திருச்சி ம. பெரியசாமி பிள்ளை.]

[கொச்சகக் கலிப்பா இவை நான்கும் குளகம்]

தமிழென்னும் மொழியினிடைத் ததும்பிடுமின் னேசைதனில்,
அமிழ்தினினி தாமென்று மதன்பொருளின் றிறமதனில்,
இமிழ்திரைமாக் கடல்ஞாலத் தியல்மொழிக ளனைத்தினுமே
தமிழ்மொழியே முதலதெனத் தக்கபெருஞ் சான்றதனில், ௧

உலகிலுள மொழியனைத்து முன்னரிய எழுத்தாயே
சிலவவரு மெனுமரிய நெறியறிஞர் அறிந்திடுமா
றுலகில்புகழ் மாணிக்க மாய்ந்துரைக்குந் திறமதனில்,
பலபொருளைச் சிலசொல்லாற் பகர்ந்திடு மப்பண்பதனில், ௨

இறப்பவுயர் வுடைத்தென்னும் மொழியிடையு மில்லாத
புறப்பொருளு மகப்பொருளும் புரையில்வினைத் தொகைமுதலாச்
சிறப்புடைய விலக்கணச்சீர்ச் செறிவதனில், இயலிசையும்
திறப்படுநன் னாடகமுஞ் சேர்சங்கத் தமிழதனில், ௩

வையகத்தா ருள்ளுவவெல் லாமுரைக்கும் வள்ளுவன்றன்
செய்யதிருக் குறளதனில், சீர்மூவர் தமிழதனில்,
உய்யவருஞ் சீர்த்திருவா சகமதனில், உன்பெருமை
கையகத்துக் கனியென்னக் காணவரும்; தமிழணங்கே!

குமரகுருபர சுவாமிகள் பரம்பரை

பட்டம்	பெயர்	மாதம்	பக்ஷம்	திதி
ஆதி	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்	வைகாசி	கிருஷ்ண	திருதியை
2	சொக்கநாத முனிவர்	மார்கழி	,,	பஞ்சமி
3	அருணாசல முனிவர்	ஆனி	சுக்கில	சஷ்டி
4	அம்பலவாண முனிவர்	ஆவணி	,,	திருதியை
5	சடையப்ப முனிவர்	தை	கிருஷ்ண	தசமி
6	தில்லைநாயக முனிவர்	பங்குனி	,,	திரயோதசி
7	குமாரகுரு முனிவர்	கார்த்திகை	,,	சப்தமி
8	சிதம்பரநாத முனிவர்	மாசி	சுக்கில	தசமி
9	சடையப்ப முனிவர்	தை	கிருஷ்ண	நவமி
10	கணபதி முனிவர்	வைகாசி	,,	சதுர்த்தசி
11	இராமலிங்க முனிவர்	சித்திரை	சுக்கில	,,
12	சொக்கலிங்க முனிவர்	ஆடி	,,	ஏகாதசி
13	கணபதி முனிவர்	ஐப்பசி	,,	,,
14	இராமலிங்க முனிவர்	புரட்டாசி	,,	திரயோதசி
15	குமாரகுரு முனிவர்	ஆடி	,,	நவமி
16	பொன்னம்பல முனிவர்	புரட்டாசி	,,	ஏகாதசி
17	சோமசுந்தர முனிவர்	கார்த்திகை	,,	துவாதசி
18	சொக்கலிங்க முனிவர்	சித்திரை	,,	பஞ்சமி

இடம்

ஆதி குமரகுருபர சுவாமிகள் முதல் ஐவர், காசி
தில்லைநாயக சுவாமி முதல் மற்றையோர், பனசை

தென்னிந்திய தமிழ்ச் சங்கம்,
திருநெல்வேலி.

இளந்தமிழ்ப் புலவர்க்குரிய பாடங்கள்

[செல்வி ௬, ௭-ம் இதழ்களில்இச்சங்கத்தினரால் நடத்தப்படும் பரீக்ஷைகளின் விவரமும், நடத்தப்படும் இடங்களின் பெயர்களும், பரீக்ஷை விதியும், பரிசு விவரமும், முதலாவதாயுள்ள தமிழ்த்தேர்வுப் பரீக்ஷைக்குள்ள பாடங்களும் வெளிவந்திருக்கின்றன. இந்த இதழில் இளந்தமிழ்ப் புலவர்க்குரிய பரீக்ஷைகளுக்குள்ள பாட விவரங்கள் வெளிவருகின்றன.]

(அடுத்த இதழில் தமிழ்ப்புலவர், பொது, சிறப்புக்குரிய பாடங்கள் வெளிவரும்.)

இளந்தமிழ்ப் புலவர்

I நீதி நூல்,

திருக்குறள்:—அறத்துப்பால்.

நாலடியார்:—பொருட்பாலில் முதற் பத்து அதிகாரங்கள். உரையுடன் (கழகப்பதிப்பு)

II சிறுகாப்பியம்.

நான்மணிக்கடிகை (கழகப்பதிப்பு)

தஞ்சைவாணன் கோவை, திருவரங்கத்தந்தாதி, மறைசையந்தாதி,

மதுரைக் கலம்பகம் (கழகப்பதிப்பு)

அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் (,,)

நீனேவாட்சி:—இலக்குமணபிள்ளை (திருவனந்தபுரம்)

III பெருங்காப்பியம்

கம்பராமாயணம், சுந்தரகாண்டம்:—உருக்காட்டுப்படலம், திருவடி தொழுதபடலம்.

பாரதம்:—கிருஷ்ணன் தூதுச் சருக்கம்

மணிமேகலை.—சிறைவிடுகாதை ஆபுத்திரன் நாடடைந்த காதை

நைடதம்:—நளன் தூதுப்படலம்

புறநானூறு:—முதல் ஐம்பது பாடல்

திருமுருகாற்றுப்படை

IV சமயநூல்

அப்பர் திருநேரிசை (தேவாரம்.)

திருவாய்மொழி:—முதற்பத்து முதலாவது திருவாய்மொழி
இரண்டாம் பத்து பத்தாவது திருவாய்மொழி
மூன்றும் பத்து நாலாவது திருவாய்மொழி
நாலாம் பத்து ஏழாவது திருவாய்மொழி
ஐந்தாம் பத்து பத்தாவது திருவாய்மொழி

V இலக்கணம்

நன்னூல் விருத்தி, நம்பியகப்பொருள், இலக்கண விளக்கப்பாட்டியல், புறப்பொருள் வெண்பா மாலை, தண்டியலங்காரம்.

VI வசனம்

கபிலர், நக்கீரர்:—ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

புலவர் சரித்திரம்:—அ. குமாரசாமிப் புலவர்.

கரிகாற்சோழன்:—L. உலகநாதபிள்ளை.

பண்டைத் தமிழரும் ஆரியரும்:- வேதாசல சுவாமிகள்.

திருக்குறள் நூல்நயம்:—P. R. சேதுப்பிள்ளை.

VII வியாசம்:—பொது

செய்யுளியற்றல்:— வெண்பா, ஆசிரியப்பா.

குறிப்பு

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை

புதுக்கோட்டை அரசினர் ஆட்சியுட்பட்ட மேலைச்சிவபுரி என்னும் இந்நகரில் இறைவன் திருவருளால் நடைபெற்றுவரும் சன்மார்க்க சபையின் பதினாறும் ஆண்டு நிறைவுத் திருவிழா குரோதன ஆண்டு ஆவணித்திங்கள் ௧௧, ௧௨, ௧௩-ம் நாட்களில் சிதம்பரம் ஸ்ரீ மீனாட்சி தமிழ்க் கல்லூரித் தலைமையாசிரியர் (Principal) மஹாமஹோபாத்தியாய பிரம ஸ்ரீ வே. சாமிநாதையாவர்கள் தலைமையில் பெருஞ் சிறப்போடு நடைபெற்றது.

அந் நாட்களில் இராமநாதபுரம் சேது சமஸ்தான வித்வான் ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்கள் மகிபாலன்பட்டி வித்வான் ஸ்ரீ.மு. கதிரேசச் செட்டியாரவர்கள் முதலிய சிறந்த பல பண்டிதர்களின் அரிய சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. அம்மாபெருங் கூட்டத்தில் சேதுசமஸ்தான வித்வான் ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்களுக்கு "மகாவித்

க. சைவப்பிரகாசனம்

யாழ்ப்பாணத்து நீர்வேலிச் சங்கரபண்டிதரவர்கள் இயற்றியது

இதன் பொருளடக்கம்

I இலக்கணம்
இலக்கண இயல்பு. இலக்கண விபாகம்.

II பிரமாணம்
பிரமாண இயல்பு, பிரமாண விபாகம், பிரத்தியக்ஷம், பிரத்தியக்ஷப் போலி, அநுமானம், அநுமானப்போலி, ஆகமம், ஆகமப்போலி

III சுருதி நிரூபணம்
சுருதி இலக்கணம், சுருதி விபாகம், சுருதிப் பிரமாணம்

IV சமய நிரூபணம்
சமய இலக்கணம், சமய பதார்த்தம், சமய பதார்த்தப் பிரமாணம்

V சைவச்சுருதி நிரூபணம்

VI சைவசமய நிரூபணம்
பதி, பசு, பாசம், பதி கிருத்தியம், பசு கருமம், பசு போகம், முத்தி சாதனம், முத்தி

இது சைவஞான சாத்திரங்களை அறிதற்கு இன்றியமையாது வேண்டப்படும் தருக்க அறிவையும் அதனை உபயோகிக்கும் முறைமையையும் நன்கு விளக்குவது. இதனைக் கற்றுணர்ந்தவர்கள் சிவஞான போதம் முதலிய நூல்களை ஓதி யுணர்தற்கு அதிகாரி களாவர்.

உ. குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு

இதில் கந்தர் கலிவெண்பா முதல் கைலைக்கலம்பகம் வரை 15 நூல்கள் உள்ளன. (கைலைக்கலம்பகம் மட்டும் இதுவரை வெளிவராதது) அரும் பொருள் விளக்க உரையினை இறுதியில் 237 பக்கங்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. சமய அறிவையும், முருகனருளையும் பெற விரும்புவார் வாங்கிக் கற்கக்கூடிய ஓர் அருமை நூலாகும். ஷை சுவாமிகளின் திருவுருவப்படத்துடன் வழு வழுப்பான உயர்ந்த சீமைக் கடிதத்தில் 656 பக்கங்கள் உள்ளது; அழகிய முழுக் கலிக்காக் கட்டடம் பொன் கிலிட்டுடன் விலை ரூபா 3 8

௩. அகத்தியர் தேவாரத்திரட்டு மூலமும் உரையும்

பன்னிரு திருமுறைகளையும் மாதம் ஒரு திருமுறை வீதம் பல வருடங்களாக 12 திருமுறையையும் 31 முறை ஓதி வந்தவரும், இன்னும் ஓதிவருபவரும், வடமொழி தென்மொழிப்புலமை நிரம்பிய வருமான திரு. கய்ப்பாக்கம் சதாசிவசெட்டியாரவர்களால் எழுதப்பட்ட பதவுரை, விளக்கவுரையுடன் வழுவழுப்பான உயர்ந்த சீமைக்கடிதத்தில் 384 பக்கங்கள் உள்ளது; அழகிய கலிக்கா கட்டடம் பொன் கிலிட்டுடன். விலை ரூபா 1 12.

031~211,N22

அரிய நூல்கள்

அரதத்தாசாரியர் அருளிய வடமொழிச் சுருதி சூக்தி மாலை (நாகர லிபியில்) வியாக்கியானத்துடனும், தமிழ் மொழிபெயர்ப்புடனும் வழுவழுப்பான உயர்ந்த சீமைக் கடிதத்தில் 400 பக்கங்கள் உள்ளது; அழகிய முழுக்கலிக்காக் கட்டிடம் பொன்கிலிட்டுடன். விலை ரூபா 3

அரதத்தாசாரியர் அற்புத சரித்திரம் அணா 4

ஆத்திசூடி மூலம் பதவுரை விளக்கவுரையுடன் அணா 2

கொன்றைவேந்தன் மூலமும் பதவுரை விளக்கவுரையும் (மேற்கூறிய உரை இரண்டும் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் இயற்றியது) அணா 2

திருஞானசம்பந்தர் தேவாரம் இயற்கைப் பொருளழகு (திரு. கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் இயற்றியது) அ. 4

பதினெண் கீழ்க்கணக்கு

கார் நாற்பது மூலமும் உரையும்

உரையாசிரியர் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர், திரு ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள். ரூ. 0 5

நானாற்பது உரையுடன்

கார்நாற்பது, களவழி நாற்பது, இன்னாநாற்பது, இனியவை நாற்பது இவை நான்கும் உரையுடன் விலையுயர்ந்த கடிதத்தில் காலிக்கா கட்டடஞ் செய்யப்பட்டது. ரூ. 1 8

திருவாசகம் மூலமும் குறிப்புரையும்

கிளேஸ் கடிதப் பதிப்பு நடராஜர், மாணிக்கவாசகர் உபதேசப் படங்களுடன் அழகிய காலிக்கா கட்டிடம் பொன் கிலிட்டுடன் (பாக்கட்) விலை ரூ. 1 8

ஷை (உயர்ந்த பதிப்பு)

விலையுயர்ந்த (Featherweight) கடிதத்தில் ரெக்சின் (Rexin) துணியில் பஞ்சு வைத்துக் கண்ணைக்கவரும் வண்ணம் பொன் கிலிட்டுடன் கட்டடஞ் செய்யப்பட்டது (பாக்கட்) ரூ 3 8

அழகிய தமிழ்ப் புத்தகங்கள்

(முன் பக்கத் தொடர்ச்சி)

திருவனந்தபுரம், சங்கீதப்பெரும் புலவரும்,
தமிழ், ஆங்கில தத்துவ நூலாராய்ச்சி வல்லுநரும்.
'தென்னிந்திய ரவீந்திர நாத் தாகூர்'
என்னும் பட்டஞ் சூட்டப் பெற்றவருமான
திருவாளர். தி. இலக்குமண பிள்ளை, B.A.,
அவர்களியற்றிய

1. **English Essays**. Contents :—Fate, Responsibility, good and evil, Christ and Tiruvalluvar, Travancore Music and Musicians, Thiagayya, Love in Hindu Marriages, Nerve Force; Philosophy of Vegetarianism (with scientific appendix) Worship. etc. Contains 394 Pages Full Calico. ... Rs. 2

உ. தமிழ்ச்செய்யுட்கோவை
(நினைவாட்சி முதலிய அரிய செய்யுட்கள் அடங்கியது.) விலை. ரூ. 1

ங. ரவிவர்மா (ஓர்தமிழ் நாடகம்) விலை. 0 1

ச. 'சங்கீதம்' (அச்சில்)

குறிப்பு : இந்நூலாசிரியரின் அறிவாற்றலை இவர்கள் நூலை கண்ணுற்றோ ரெவரும் நன்குணர்வர்.

நமது கழக நூல்கள்

சைவப்பிரகாசனம் ரூ 1 0

அச்சிலிருப்பவை.

1 சேரமான் பெருமாணயனர் திருக்கைலாய ஞானவுலா.
இது திரு கயப்பாக்கம். சதாசிவ செட்டியாரவர்கள், B. A.,
இயற்றிய குறிப்புரையுடன்.

2 சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.
இதுவும் ஷை செட்டியாரவர்கள் குறிப்புரையுடன்

3 அறிவு விளக்க வாசகம்.
(திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை) யவர்கள், M.A. M.L.,

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
30F, லிங்கசெட்டித் தெருவு, சென்னை